# பொருளியல்

## (க. பொ. த உயர்தரம்)

## கடந்த காலப் பரீட்சை வினாக்கள்
## ( 2003 – 2015 )

### தேர்ச்சிகள் 02, 03

- கேள்வி
- நிரம்பல்
- நெகிழ்ச்சி
- சந்தைச் சமநிலை
- மறைமுகவரியும் சந்தைச் சமநிலையும்
- மானியமும் சந்தைச் சமநிலையும்
- கட்டுப்பாட்டு விலைகள்
- உற்பத்திக் கோட்பாடு
- செலவுக் கோட்பாடு
- சந்தை அமைப்புக்கள்


ஆசிரியர் :-

**திரு.S.ஜெயகுமார்**

[B.A.(Hons) EcoSpl, M.A. (Eco) P.G.D.E]

யா/வயாவிளான் மத்திய கல்லூரி

# கடந்தகால பரீட்சை வினாக்கள்
# (2003 – 2015)

## August 2003

01) i) கேள்வியின் விலைநெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள்யாவை? (03 புள்ளி)

ii) எவ்வகையான பொருட்கள் பின்வரும் கேள்வி நெகிழ்ச்சிகளைக் கொண்டிருக்கும்?

அ) நேர்க்கணிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சி

ஆ) எதிர்க்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி

இ) ஒன்றிற்கும் கூடிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி (03 புள்ளி)

iii) ஒரு பொருளினது விலை வீழ்ச்சியினாலேற்படும் வருமான விளைவையும், பதிலீட்டு விளைவையும் எவ்வாறு வரையறுப்பீர்? (04 புள்ளி)

iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் மொத்த வருமானம் கூடுமா? குறையுமா? மாறாதிருக்குமா எனக் கூறுக.

அ) விலை வீழ்ச்சியடையும்போது கேள்வி நெகிழ்ச்சியற்றதாகாகவிருப்பின்

ஆ) விலை உயரும்போது கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகவிருப்பின்

இ) விலை உயரும்போது கேள்வி நெகிழ்ச்சியற்றதாகவிருப்பின்

ஈ) விலை வீழ்ச்சியடையும்போது கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகவிருப்பின்

உ) விலை வீழ்ச்சியடையும்போது கேள்வி அலகு நெகிழ்ச்சியைக் கொண்டிருப்பின் (05 புள்ளி)

02) i) "உற்பத்தியாளர் மிகையை" வரிப்படம் ஒன்றின் உதவியுடன் விளக்குக. (03 புள்ளி)


ii) நிறைப்போட்டிக்கும், தனியுரிமைப் போட்டிக்கும் இடையிலான எவையேனும் இரு ஒற்றுமைகளையும், இரு வேறுபாடுகளையும் விளக்குக. (04 புள்ளி)

iii) "குறைந்து செல்லும் விளைவு"களுக்கும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு" களுக்குமிடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின் அது யாது? (04 புள்ளி)

iv) எச்சந்தர்ப்பங்களில் ஒரு உற்பத்திக்காரணியின் மொத்த உழைப்புக்களில் "மாற்றல் வருமானங்கள்" அடங்கியிருக்கும்? வரிப்படமொன்றைக் கையாண்டு உமது விடையை விளக்குக. (04 புள்ளி)

## August 2004

03) ஓர் அலகுவரியானது உற்பத்தியாளர்மீதுகொண்டுள்ள தாக்கத்தைக்காட்டும் இவ்வரைபினைக் கையாண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.



i) வரிக்கு முன்னரும், வரிக்குப் பின்னரும் சமநிலைவிலை, தொகை என்பவை யாவை? (02 புள்ளி)

ii) நுகர்வோரால் சுமக்கப்படும் மொத்த வரியின் அளவு யாது? (02 புள்ளி)

iii) வரி அமுலாக்கப்பட்ட பின்னர் திரட்டப்பட்ட மொத்த வரி வருமானம் யாது? (03 புள்ளி)

iv) சந்தை சமநிலையில் உள்ளபோது வரிக்கு முன்னர் உற்பத்தியாளர் மிகை யாது? வரிக்குப்பின் அம் மிகை யாது? (04 புள்ளி)

v) சந்தை சமநிலையில் உள்ளபோது வரிக்கு முன்னர் நுகர்வோர் மிகை யாது? வரிக்குப்பின் அம் மிகை யாது? (04 புள்ளி)

(04) சந்தை ஆய்வொன்று x பொருளுக்கான கேள்வி பற்றிய பின்வரும் தகவல்களைத் தருகின்றது.

அ) x பொருளின் விலை 25% இனால் உயருமானால் அதன் விற்பனை அலகுகள் 5% இனால் குறைகின்றது.

ஆ) நுகர்வோர் வருமானம் 4% இனால் அதிகரித்தால் x பொருளின் விற்பனை அலகுகள் 8% இனால் அதிகரிக்கின்றன.

இ) y பொருளின் விலை 1% இனால் அதிகரிக்குமாயின் x பொருளின் விற்பனை அலகுகள் 5% இனால் வீழ்ச்சியடைகின்றன.

மேலே குறிப்பிட்ட சாத்தியமான நிகழ்வுகள் ஒவ்வொன்றினும் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i) x பொருளுக்கான வருமான நெகிழ்ச்சி யாது? (03 புள்ளி)

ii) x பொருளுக்கான விலை நெகிழ்ச்சி யாது? (03 புள்ளி)

iii) பொருள் y தொடர்பில் x பொருளின் குறுக்குவிலை நெகிழ்ச்சி யாது? (03 புள்ளி)

iv) x பொருள் y பொருளுக்கு ஒரு இணைபொருளா அல்லது பதிலீடா? (03 புள்ளி)

v) x பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளதா, நெகிழ்ச்சியற்றதா? (03 புள்ளி)

## April 2005

(05) போட்டிச் சந்தை ஒன்றிலே விற்கப்படும் ஒரு பண்டத்திற்கான சந்தைக் கேள்வி நிரம்பற் சார்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Q_D = 20 - P$ (கேள்விச் சார்பு)

$Q_S = -8 + 6P$ (நிரம்பற் சார்பு)

அ) இப்பண்டத்தின் சமநிலைவிலையையும், அளவையும்(கணியம்) நிர்ணயிக்குக. (04 புள்ளி)

ஆ) நிரம்பற் சார்பு மாற்றமெய்தாது நிற்கும் வேளையில், கேள்விச் சார்பு $Q_D = 36 - 5P$. புதிய சமநிலை விலையையும், அளவையும் நிர்ணயிக்குக. ஆகமாறுகின்றது எனக் கருதுக. (04 புள்ளி)

இ) சந்தைக் கேள்விச்சார்பு மாற்றமெய்தாது தனது தொடக்கமட்டத்தில் நிற்கும் வேளையில், நிரம்பற் சார்பு $Q_S = -10 + 4P$ ஆகமாறுகின்றது எனக் கருதுக. புதிய சமநிலை விலையும், அளவும் எவ்வாறு அமையும்? (04 புள்ளி)

ஈ) பகுதிகள் (அ), (ஆ), (இ) என்பவற்றில் விவரிக்கப்படும் நிலைமைகளைக் காட்டும் வரிப்படம் ஒன்றை வரைக. (03 புள்ளி)

(06) அ) போட்டி நிலைமைகளின் கீழ் தொழிற்படும் ஒரு மீன் சந்தையின்மீது பின்வரும் நிகழ்வுகள் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளைப் பொருத்தமான வரிப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக.

i) சுனாமி அலைகளின் தாக்கத்தினால் மீன்பிடிவள்ளங்களின் கணிசமான எண்ணிக்கை அழிவெய்தியமை.

ii) மீனுக்கான நுகர்வு முன்னுரிமையில் ஒரு வீழ்ச்சி.

iii) கோழி இறைச்சியின் விலையில் ஒரு வீழ்ச்சி

iv) மீனவர்களுக்கு எரிபொருள் மானியக் கொடுப்பனவொன்று.

v) நன்கொடை வழங்கும் நாடுகளின் உதவியுடன் மீன்பிடித்தொழில் நுணுக்கத்தில் பாரிய முன்னேற்றம். (10 புள்ளி)

ஆ) "கேள்வி வளைகோட்டை வரையும்பொழுது வருமானம் நிலையானது எனக் கொள்ள வேண்டும். எனினும் கேள்வியின் அளவில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரணி 'வருமான விளைவு' ஆகும்" விளக்குக. (05 புள்ளி)

## April 2006

(07) பின்வரும் அட்டவணை X பண்டத்தின் சந்தைக்கேள்வி, நிரம்பல் பட்டியல்களைக் காட்டுகின்றது.

| தலா அலகுக்கான விலை (ரூ) | கேட்கப்படும் தொகை (அலகுகள்) | நிரம்பல் செய்யப்படும் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 4 | 16 | 4 |
| 6 | 12 | 6 |
| 8 | 8 | 8 |
| 10 | 4 | 10 |
| 12 | 0 | 12 |

அ) மேலே அட்டவணையிலுள்ள தரவுகளைக் கையாண்டு சந்தைக்கேள்வி, நிரம்பல் வளையிகளை வரைந்து சந்தை சமநிலை விலையை மதிப்பிடுக. (03 புள்ளி)

ஆ) அரசாங்கம் இப்பொழுது 50 வீத சேர்க்கப்பட்ட பெறுமதி வரியை விதிப்பதாகக் கருதுக. இதன் விளைவை வரைபடத்தில் காட்டுக. (03 புள்ளி)

இ) புதிய சமநிலை விலையும், தொகையும் யாவை? (02 புள்ளி)

ஈ) அலகொன்றிற்கான வரி யாது? (02 புள்ளி)

உ) (i) நுகர்வோர் மீதும் (ii) உற்பத்தியாளர் மீதும் அலகொன்றின் மீதான வரியின் தாக்கம் யாது? (02 புள்ளி)

ஊ) வரியினின்று அரசாங்கம் பெறும் மொத்த வருவாய் யாது? (02 புள்ளி)

எ) உற்பத்தியாளரின் வரிக்கு முந்திய வருவாய் எவ்வளவால் மாற்றமடையும்? (01 புள்ளி)

(08) அ) குறைந்து செல்லும் விளைவுகள் விதி அளவுத்திட்ட விளைவுகள் விதி என்பன ஒரு நிறுவனத்தின் உற்பத்திச் செலவை எவ்வாறு பாதிக்குமென விளக்குக. (04 புள்ளி)

ஆ) (i) நிறைபோட்டி, (ii) சிலருரிமை என்பவற்றின் பண்புகளை விபரிக்குக. (04 புள்ளி)

இ) ஒரு நிறைபோட்டி நிறுவனம் முட்டையொன்று ரூ. 10 என்ற விலையில் 300 முட்டைகளை விற்பதாகக் கருதுக. இவ்வுற்பத்தி நிறுவனத்தின் மொத்த மாறும் செலவு ரூ. 1800உம் நிலையான செலவு ரூ. 600உம் ஆகும். இத்தரவுகளினின்று நிறுவனத்தின் அலகொன்றிற்கான இலாபத்தையும், நிறுவனத்தின் மொத்த இலாபத்தையும் கணிக்குக. (03 புள்ளி)

ஈ) பூச்சிய சிக்கன இலாபங்களை உழைக்கும் நிறுவனங்கள் தொடர்ந்தும் ஏன் தொழிலில் இருக்கும் என்பதை விளக்குக. (04 புள்ளி)

## August 2007


(09) i) நிறைபோட்டிச் சந்தையொன்றின் பண்புகள் யாவை? (04 புள்ளி)

ii) இலங்கையின் பின்வரும் கைத்தொழில்களை பிரதான சந்தையமைப்புக்களுக்குள் வகைப்படுத்துக.

அ) மென்பானங்கள்
ஆ) புகையிரத சேவை
இ) தொலைக்காட்சி சேவை
ஈ) சில்லறை வர்த்தக நிலையங்கள்
உ) நெல் உற்பத்தி
ஊ) சிகை அலங்கார நிலையம்

(03 புள்ளி)

iii) பின்வரும் வரைபடம் குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்று எதிர்நோக்கும் செலவு மற்றும் வருமான வளையிகளைக் காட்டுகின்றது.




அ) ஓரலகிற்கான சந்தைவிலை ரூபா 20 ஆயின் நிறுவனத்தின் மொத்த பொருளியல் இலாபத்தைக் (economy profit) கணிப்பிடுக. (04 புள்ளி)

ஆ) குறுங்காலத்தில் நிறுவனம் உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு எதிர்பார்க்கும் குறைந்தபட்ச விலை யாது? ஏன் அவ்விலையை எதிர்பார்க்கிறதென விளக்குக. (04 புள்ளி)

(10) போட்டிச் சந்தையொன்றில் அரிசிக்கான கேள்வி, நிரம்பல் அட்டவணைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விலை (ரூ) கிலோகிராம் ஒன்றிற்கு | கேள்வித் தொகை மில்லியன் கிலோகிராம் | நிரம்பல் தொகை மில்லியன் கிலோகிராம் |
|---|---|---|
| 0 | 120 | -40 |
| 10 | 100 | -20 |
| 20 | 80 | 0 |
| 30 | 60 | 20 |
| 40 | 40 | 40 |
| 50 | 20 | 60 |
| 60 | 0 | 80 |

i) அரிசிச் சந்தையின் சமநிலை விலை, தொகை என்பன யாவை? (04 புள்ளி)

ii) அரிசி கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 20 மானியம் அறிமுகப்படுத்தப்படும் ஆயின் சந்தையின் சமநிலை விலை, தொகை என்பன யாவை? உமது விடையை விளக்க வரைபடமொன்று வரைக. (04 புள்ளி)

iii) மானியத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் மொத்த செலவு யாது? (03 புள்ளி)

iv) மானியத்தின் பின்னரான உற்பத்தியாளர் மிகையினை மதிப்பிடுக. (04 புள்ளி)

## August 2008

(11) i) காரணிச் சந்தையையும் பொருட் சந்தையையும் வேறுபடுத்துக. (03 புள்ளி)

ii) 'முயற்சியாண்மை' என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளி)

iii) நிரம்பல் விதியினை விளக்குக. (02 புள்ளி)

iv) நிரம்பல் வளையி மேல்நோக்கிய சரிவைக் கொண்டிருப்பதேன்? (03 புள்ளி)

v) சந்தை நிரம்பல் வளையியில் இடப்பெயர்வை ஏற்படுத்தக்கூடிய ஐந்து காரணிகளை இனங்காண்க. (05 புள்ளி)

(12) i) எவையேனும் நான்கு பண்புகளின் அடிப்படையில் நிறைபோட்டியையும், தனியுரிமைப் போட்டியையும் வேறுபடுத்திக் காட்டுக. (04 புள்ளி) (2003) Answer

ii) எலுமிச்சம் பழங்களுக்கான சந்தைக்கேள்வி மற்றும் சந்தை நிரம்பல் என்பன பின்வரும் சமன்பாடுகளால் விவரிக்கப்படுகின்றன.

நிரம்பல் $Q_S = -10 + 20P$

கேள்வி $Q_d = 50 - 10P$

(விலை ரூபாவிலும், தொகை ஒரு வாரத்திற்கான எலுமிச்சம் பழங்கள் மில்லியனிலும் தரப்பட்டுள்ளன.)

அ) சந்தைக் கேள்வி, நிரம்பல் வளையிகளை வரைபொன்றில் வரைக. (02 புள்ளி)

ஆ) சந்தை சமநிலை விலை மற்றும் தொகை யாது? (02 புள்ளி)

இ) அரசாங்கம் விவசாயிகளுக்கு எலுமிச்சம் பழமொன்றிற்கு ரூ. 2.50 உத்தரவாத விலையை வழங்கத் தீர்மானிக்கிறது. விவசாயிகள் தற்போது எந்தளவு எலுமிச்சம் பழங்களை நிரம்பல் செய்வார்கள்? (02 புள்ளி)

ஈ) விவசாயிகளின் உற்பத்தி முழுவதும் சந்தைக்கு வரும்போது சந்தை விலை யாது? (02 புள்ளி)

உ) ஒவ்வொரு வாரமும் விவசாயிகள் எந்தளவு பணத்தை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்வார்கள்? (03 புள்ளி)

## August 2009

(13) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் தரப்படுகின்றன.

$Q_d = 30 - 2P \qquad Q_S = -2 + 2P$

இங்கு $Q_d$ மற்றும் $Q_s$ என்பன முறையே கேள்வித்தொகை மற்றும் நிரம்பல் தொகையினைக் குறிக்கும். P என்பது விலை ரூபாயில் ஆகும்.

i) இச் சந்தையின் சமநிலை விலை மற்றும் தொகையினை நிர்ணயிக்குக. (04 புள்ளி)

ii) சமநிலையின்போது உற்பத்தியாளர் மிகையினைக் கணிப்பிடுக. (04 புள்ளி)

iii) சமநிலையின்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சி யாது? (04 புள்ளி)

iv) அரசாங்கமானது ரூ 10 தளவிலையினை (floor price) விலை ஆதரவு நடவடிக்கையின்றி விதிக்கின்றது. தளவிலையின் காரணமாக ஏற்படும் மிகைக்கேள்வி அல்லது மிகை நிரம்பல் யாது? (03 புள்ளி)

(14) i) அளவுத்திட்டச் சிக்கனங்கள் (economics of scale) என்னும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளி)

ii) அளவுத்திட்டச் சிக்கனங்கள் எவ்வாறு எழுகின்றன? (04 புள்ளி)

iii) சிலருரிமைச் சந்தையொன்றின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

iv) 'பிரவேசத் தடைகள்' (barriers to entry) என்ற பதத்தினால் கருதப்படுவது என்ன? (02 புள்ளி)

v) நிறைபோட்டி நிறுவனமொன்று குறுங்காலத்தில் வெளியீடொன்றை மேற்கொள்ளத் தேவையான குறைந்தபட்ச விலை யாது? ஏன் என விளக்குக. (04 புள்ளி)

## August 2010

(15) i) 'தேவைகளையும்', 'கேள்வியையும்' வேறுபடுத்துக.

ii) வருமான மற்றும் பதிலீட்டு விளைவுகளின் ஊடாகக் 'கேள்வி விதியினை' விளக்குக.

iii) விலைக்கேள்வி நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் மூன்றுகாரணிகளைப் பெயரிடுக.

iv) சீனிக்கான சந்தைக்கேள்வி வளையியானது $Q_d = 260 - 3P$ எனவும், அதன் சந்தை நிரம்பல் வளையியானது $Q_s = -140 + 2P$ எனவும் கொள்க.

அ) சீனி ஓரலகின்மீது அரசாங்கம் ரூபா 5 உள்ளூர் பொருள்வரியினை விதிப்பதாகக் கருதுக. வரி அமுலாக்கத்தின் பின்னர் ஓரலகு சீனிக்காக நுகர்வோர் செலுத்தும் விலை யாது?

ஆ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் மாற்றமென்ன?


(16) i) 'உற்பத்தியாளர் மிகைக்கும்', 'பொருளியல் இலாபத்திற்கும்' இடையிலான வேறுபாடு யாது?

ii) 'குறைந்து செல்லும் விளைவுகள்' மற்றும் 'குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவுகள்' என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.

iii) 'இயற்கைத் தனியுரிமை' என்னும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

iv) நிறைபோட்டித் தொழிலிலுள்ள நிறுவனமொன்று விலையை ஏற்போனாக இருப்பதேன்?

v) பின்வரும் வரைபடம் நிறைபோட்டித் தொழிலில் இயங்கும் நிறுவனமொன்றின் குறுங்கால நிலைமைகளைக் காட்டுகின்றது.



அ) ஓரலகு வெளியீட்டின் சந்தை விலை ரூபா 40 ஆயின் குறுங்காலத்தில் இந்நிறுவனம் உற்பத்தி செய்யத் தீர்மானிக்கும் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டம் யாது?

ஆ) இந்நிலையில் நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தின் அளவினைக் கணிப்பிடுக.

இ) இந்நிறுவனத்தின் நிலையான செலவுகளின் பெறுமதி யாது?


## August 2011 (New)

(17) i) ஒரு பொருளுக்கான நுகர்வோன் கேள்வியை தீர்மானிக்கும் பிரதான காரணிகளைப் பட்டியற்படுத்துக. (04 புள்ளி)

ii) சாதாரண பொருள், இழிவுப் பொருள் மற்றும் கிபன் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக. (03 புள்ளி)

iii) "அதிகரித்துச் செல்லும் கேள்வியின் மத்தியிலும் பிரத்தியேகக் கணனிகளின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றன." பொருத்தமான ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி இந்நிலையினை விளக்குக. (05 புள்ளி)

iv) பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக. வரைபடத்தில் DD கேள்வி வளையியையும், S என்பது அரசாங்கம் விதித்த விசேட உற்பத்தி வரிக்கு (specific production tax) முந்திய நிரம்பல் வளையியையும் S + T என்பது வரிக்குப் பின்னரான நிரம்பல் வளையியையும் காட்டுகின்றன.




அ) வரிவிதிக்கப்படமுன் சமநிலைவிலையில் நுகர்வோர் மிகையைக் காட்டும் பிரதேசம் எது? உற்பத்தியாளர் மிகையைக் காட்டும் பிரதேசம் எது? (02 புள்ளி)

ஆ) உற்பத்தியாளர் மீது வரிவிதிக்கப்பட்ட பின்னர் நுகர்வோர் மிகையையும், உற்பத்தியாளன் மிகையையும் காட்டும் பிரதேசங்கள் எவை? (02 புள்ளி)

இ) வரியினால் ஏற்படும் மீளமுடியா இழப்பைக் காட்டும் பிரதேசம் எது? (02 புள்ளி)

ஈ) அரசாங்கத்தால் திரட்டப்பட்ட வரி வருவாயைக் காட்டும் பிரதேசம் எது? (02 புள்ளி)

(18) i) உற்பத்தியில் குறுங்காலம் மற்றும் நீண்டகாலம் என்பவற்றை வேறுபடுத்துக. (02 புள்ளி)

ii) 'குறைந்து செல்லும் விளைவு விதி'யினை விளக்குக. (02 புள்ளி)

iii) உதாரணங்கள் தந்து வெளிப்படையான செலவுகள் (explicit costs), மற்றும் உட்கிடையான செலவுகள் (implicit costs) என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளி)

iv) அளவுத்திட்டச் சிக்கனங்கள் என்றால் என்ன? அவை எவ்வாறு உருவாகின்றன? (06 புள்ளி)

v) நால்வகைச் சந்தை அமைப்புகளும் எவை? அவற்றில் ஏதாவதொன்றின் பிரதான பண்புகளை விளக்குக. (06 புள்ளி)

## August 2011 (Old)

(19) தேங்காய்களுக்கான போட்டிச் சந்தையில் நேர்கோட்டு கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளின் மீதுள்ள இவ்விரு புள்ளிகளின் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

| விலை (அலகொன்றிற்கு ரூ) | கேள்வி (நாளொன்றுக்கு காய்கள்) | நிரம்பல் (நாளொன்றுக்கு காய்கள்) |
|---|---|---|
| 20 | 800 | 0 |
| 70 | 300 | 500 |

i) வரைபுத் தாளொன்றில் சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளை வரைந்து சமநிலை விலை மற்றும் தொகையை நிர்ணயிக்குக. (04 புள்ளி)

ii) தேங்காயொன்றிற்கு ரூ. 20 வீதம் சிறப்பு (அலகு) மானியமொன்றை அரசாங்கம் வழங்குவதாகக் கொள்க. சமநிலையின் மீது இந்நடவடிக்கையின் தாக்கத்தினை வரைபடத்திற் காட்டுக. (04 புள்ளி)

iii) மானியத்திற்கு முன்பும், பின்பும் உற்பத்தியாளன் மிகையினைக் கணிப்பிடுக. (04 புள்ளி)

iv) மானியத்திற்காக அரசாங்கம் செலவிடவேண்டியுள்ள பணத்தின்அளவு யாது? (03 புள்ளி)

(20) i) உற்பத்திச் செயன்முறையில் குறுங்காலம் மற்றும் நீண்டகாலம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் கூறுக. (02 புள்ளி)

ii) “குறைந்து செல்லும் விளைவு விதி”யினை விளக்குக. இவ்விதிக்கு அடிப்படையாகவுள்ள எடுகோள்கள் எவை? (04 புள்ளி)

iii) நேர் செலவுகள் மற்றும் நேரில் செலவுகள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் கூறுக. ஒவ்வொரு செலவுக்கும் உதாரணந்தந்து உமது விடையை விளக்குக. (04 புள்ளி)

iv) பொருளியலாளர்களால் சாதாரண இலாபம் ஒரு செலவாகக் கருதப்படுவதேன்? பொருளியல் இலாபம் உற்பத்திச் செலவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறதா? உமது விடையை விளக்குக. (05 புள்ளி)

## August 2012 (New)

(21) i) ‘கேள்வி விதியினை’ விளக்குக. கேள்வி வளையியானது ஏன் கீழ்நோக்கிச் சரிகின்றது? (04 புள்ளி)

ii) பொருளொன்றின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைப் பின்வரும் சமன்பாடுகள் விபரிக்கின்றன.

$Q_d = 50 - 5P$

$Q_s = -10 + 5P$

சமன்பாடுகளைத் தீர்த்து சமநிலைவிலை, சமநிலைத் தொகை என்பவற்றை நிர்ணயிக்குக. (04 புள்ளி)

iii) சமநிலை விலையில் விலைக் கேள்வி நெகிழ்ச்சியினைக் கணிப்பிடுக. (02 புள்ளி)

iv) இச்சந்தையிலுள்ள உற்பத்தியாளர்களுக்கு அலகொன்றுக்கு 8 ரூபா உத்தரவாத விலையினை அரசாங்கம் அறிமுகஞ் செய்வதாக கருதுக. இவ்விலை ஆதரவுத் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் மொத்தச் செலவு எவ்வளவு? (04 புள்ளி)

v) உத்தரவாத விலையின் கீழ் நுகர்வோன் மிகை மற்றும் உற்பத்தியாளன் மிகை என்பவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்க. (06 புள்ளி)

(22) i) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு என்பதனாற் கருதப்படுவது என்ன? (02 புள்ளி)

ii) 'குறைந்து செல்லும் விளைவு விதி' என்றால் என்ன? குறுங்கால செலவு வளையிகளின் வடிவத்தில் அது எத்தகைய விளைவுகளைக் கொண்டுள்ளது? (04 புள்ளி)

iii) கணக்கியல் இலாபம் மற்றும் பொருளியல் இலாபம் ஆகிய எண்ணக்கருக்கள் எவ்வாறு வேறுபடுகின்றன? (04 புள்ளி)

iv) விலை உருவாக்குவோன் (Price maker) மற்றும் விலை ஏற்போன் (Price taker) ஆகிய எண்ணக்கருக்களால் கருதப்படுவதென்ன? (04 புள்ளி)

v) தனியுரிமைப் போட்டியிலிருந்து சிலருரிமையை ஏவறுபடுத்துவது எது? (06 புள்ளி)

## August 2012 (Old)

(23) i) பொருளொன்றின் கேள்வி வளையியானது ஏன் கீழ்நோக்கிச் சரிவடைகிறதென விளக்குக. (02 புள்ளி)

ii) பொருளொன்றின் நிரம்பல் அதன் விலை அதிகரிக்கும்போது ஏன் அதிகரிக்கிறது என விளக்குக. (02 புள்ளி)

iii) பொருளொன்றின் கேள்வி வளையியானது பின்வரும் சமன்பாட்டினாற் தரப்படுகின்றது.

$Q_d = 300 - 5P$

அ) உரிய கேள்வி வளையியை வரைபடமொன்றில் வரைக. (03 புள்ளி)

ஆ) இப்பொருளின் சமநிலைச் சந்தைவிலை ரூபா 30 ஆயின், சமநிலை விலையில் விலைக் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக. (04 புள்ளி)

இ) சமநிலை விலையில் நுகர்வோன் மிகையின் அளவினைக் கணிப்பிடுக. (04 புள்ளி)

(24) i) 'அளவுத்திட்ட சிக்கனங்கள்' (economics of scale) என்பதனால் கருதப்படுவதுதென்ன? (02 புள்ளி)

ii) அளவுத்திட்ட சிக்கனங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன? (03 புள்ளி)

iii) கணக்கியல் இலாபம், பொருளியல் இலாபம், சாதாரண இலாபம் என்பவற்றை வேறுபடுத்துக.? (06 புள்ளி)

iv) நிறைபோட்டி நிறுவனம் தனது உற்பத்திக்கு எத்தகைய கேள்வி வளையியைக் கொண்டிருக்கும்? அது ஏன்? (04 புள்ளி)

## August 2013 (New)

(25) i) சந்தை விலையில் சமிக்ஞை வழங்கும் தொழிற்பாட்டையும், பங்கீடு செய்யும் தொழிற்பாட்டையும் விபரிக்குக. (04 புள்ளி)

ii) கைத்தொழில் உற்பத்தியொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் விலை தவிர்ந்த நான்கு காரணிகளைப் பெயரிடுக. (04 புள்ளி)

iii) குறித்த பொருளொன்றின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் அட்டவணை பற்றிய சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விலை ரூபா | கேள்வித்தொகை ($Q_d$) | நிரம்பல் தொகை ($Q_s$) |
|---|---|---|
| 4 | 84 | 12 |
| 8 | 68 | 44 |

கேள்வி நிரம்பல் வளையிகள், நேர்கோடுகள் எனக்கருதி, சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றின் சமன்பாடுகளைப் பெறுக. (03 புள்ளி)

iv) கேள்வி நிரம்பல், சமன்பாடுகளைப் பயன்படுத்தி சமநிலை விலை மற்றும் தொகை என்பவற்றைக் கணிப்பிடுக. (04 புள்ளி)

v) அரசாங்கம் அலகொன்றிற்கு ரூபா 3 வீதம் அலகு வரியொன்றை விதிக்குமாயின், வரியின் பின்பு உற்பத்தியாளர் பெறும் விலையினையும், அரசாங்கத்தின் வரி வருவாயையும் கணிப்பிடுக. (04 புள்ளி)

(26) i) குறைந்து செல்லும் விளைவு விதியும், அளவுத்திட்ட விளைவு விதியும் நிறுவனமொன்றின் உற்பத்திச்செலவுகளை எவ்வாறு பாதிக்குமென விளக்குக. (04 புள்ளி)

ii) நிறுவனமொன்றின் எல்லைச் செலவு வளையிக்கும் இந்நிறுவனம் உள்ளடங்கும் கைத்தொழிலின் நிரம்பல் வளையிக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு காணப்படுகின்றதா என்பதை கலந்துரையாடுக. (04 புள்ளி)

iii) நிறைபோட்டிக் கைத்தொழில் ஒன்று கீழ்நோக்கிச் சரியும் கேள்வி வளையியை எதிர்நோக்கும் அதேவேளை நிறைபோட்டியின் கீழ் இயங்கும் நிறுவனமொன்று கிடையச்சுக்கு சமாந்தரமான கேள்வி வளையியை எதிர்கொள்வது ஏன் என விளக்குக. (04 புள்ளி)

iv) குறுங்காலத்தில் இயங்கும் நிறுவனமொன்றின் மொத்த வருவாய் ரூபா 100 மில்லியனாகவும், மொத்தச் செலவு ரூபா 120 மில்லியனாகவும்,மொத்த நிலையான செலவு ரூபா 40 மில்லியனாகவும் உள்ளது. இந்நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நீடித்திருக்க வேண்டுமா? ஏன்? (04 புள்ளி)

v) எல்லாச் சந்தை அமைப்புக்களிலும், இலாப உச்சப்படுத்தலுக்கு எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமப்படுவது ஏன் அத்தியாவசியமானது? தொழிலானது நிறைபோட்டித் தன்மை வாய்ந்ததாக உள்ளபோது எல்லை வருவாய் = எல்லைச் செலவு *(MR = MC)* என்ற நிபந்தனையில் எல்லை வருவாய்க்குப் *(MR)* பதிலாக ஏன் விலை *(P)* பிரதியீடு செய்யப்படலாம் என விளக்குக. (04 புள்ளி)

(27) i) செல்லிடத் தொலைபேசிகளுக்கான சந்தைக் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (05 புள்ளி)

ii) பொருளொன்றின் விலைக்கும், நிரம்பல் தொகைக்கும் இடையிலான நேர்த் தொடர்பினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் எவை? (05 புள்ளி)

iii) பொருளொன்றின் நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் 'ஏனைய பொருள்களின் விலை' என்பதனால் கருதப்படுவதென்ன? (05 புள்ளி)

iv) "சுதந்திரமான சந்தை ஒன்றில் சமநிலையொன்று ஏற்பட வேண்டுமாயின் உயர்ந்தபட்ட கேள்வித் தொகையினை விடக் குறைந்தபட்ச நிரம்பல் தொகையானது குறைவாக இருத்தல் வேண்டும்." இக்கூற்றை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக. (05 புள்ளி)

(28) குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$Q_d = 150 - 5P$ (கேள்விச் சமன்பாடு)

$Q_s = 75 + 10P$ (நிரம்பல் சமன்பாடு)

மேற்படி தகவல்களின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

i) சந்தை சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை? (02 புள்ளி)

ii) சந்தை சமநிலையின்போது நிலவும் நுகர்வோன் மிகையின் பெறுமதி? (03 புள்ளி)

iii) சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகங்களின் பெறுமதி? (04 புள்ளி)

iv) அரசாங்கத்தினால் இப்பொருளின் மீது ரூ. 1.50 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின்,

அ) வரியின் பின்னரான புதிய சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை? (02 புள்ளி)

ஆ) அரசாங்கத்தின் வரி வருவாய்? (03 புள்ளி)

இ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் மாற்றத்தின் அளவு? (03 புள்ளி)

ஈ) வரியின் காரணமாக சமூகத்திற்கு ஏற்படும் நலன் இழப்பின் அளவு? (03 புள்ளி)

## August 2015

29)

(i) சந்தை நிரம்பல் வளையியொன்றை வரையும்போது நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வருமான விளைவும் பதிலீட்டு விளைவும் 'கேள்வி விதியினை' எவ்வாறு விளக்குகின்றன என்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) குறைந்தபட்ச விலையையும் உயர்ந்தபட்ச விலையையும் வேறுபடுத்தி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(iv) நிரம்பல் நெகிழ்வற்றதாக இருக்குமாயின் உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் சிறப்பு (அலகு) வரியின் சுமையின் பெரும் பகுதியினை யார் செலுத்துவார் ? பொருத்தமான வரைபொன்றைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$Q_d = 100 - 4P$ (கேள்வி) $Q_s = -30 + 6P$ (நிரம்பல்)

(அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தைச் சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபொன்றில் சரியாக வரைந்து காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைச் சமநிலையின்போது உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபிற் காட்டுக. (02 புள்ளிகள்)

30)

(i) ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தந்து வெளிப்படையான (நேர்) செலவுகளையும் உட்கிடையான (நேரில்) செலவுகளையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருளியலாளர்கள் சாதாரண இலாபத்தை ஒரு செலவாகக் கருதுவதேன் ? (04 புள்ளிகள்)

(iii) நால்வகைச் சந்தை அமைப்புகளையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iv) இலாப உச்சப்படுத்தலுக்கான நிபந்தனை என்ன ? விலையை ஏற்கும் ஓர் உற்பத்தி நிறுவனம் தொடர்பில் இந்நிபந்தனை எவ்வாறு அமையும் ? (04 புள்ளிகள்)

(v) தரப்பட்ட குறுகிய காலமொன்றில் விலையை ஏற்கும் உற்பத்தி நிறுவனமொன்று 20 அலகுகளை உற்பத்தி செய்வதாகக் கருதுக. அதன் வெளியீட்டலகொன்றின் சந்தை விலை ரூபா 50 ஆகும். 20 அலகு வெளியீட்டில் சராசரி மொத்தச் செலவு ரூபா 60 ஆகவும் சராசரி மாறுஞ்செலவு ரூபா 40 ஆகவும் உள்ளன.

(அ) இந்த குறுகிய காலப்பகுதியில் நிறுவனம் அடையும் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அளவு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு எவ்வளவு ? (02 புள்ளிகள்)

# M.C.Q

## April 2003

01) ஒரு சாதாரண பண்டத்திற்கான கேள்வி வளையியானது எப்பொழுது இடப்புறமாக நகரும்?

1) நுகர்வோரது வருமானங்கள் அதிகரிக்கும் பொழுது
2) அப்பண்டத்தின் விலை அதிகரிக்கும் பொழுது
3) நிரப்பு பண்டங்களின் விலைகள் அதிகரிக்கும் பொழுது
4) நிரப்புப் பண்டங்களின் மீதான விளம்பரச் செலவுகள் அதிகரிக்கும் பொழுது
5) அப்பண்டத்திற்கான தேர்வு அதிகரிக்கும் பொழுது.

02) தேங்காய்க்கான சந்தைக் கேள்விச்சார்பு பின்வருமாறு :

$Q_d = 300 - 6P$

தேங்காய்க்கான சந்தை நிரம்பல் சார்பு பின்வருமாறு :

$Q_s = 20 + 8P$


தேங்காய் விலை ரூபா 15 ஆகவிருக்குமாயின், தேங்காய்க்கான சந்தையில்,

1) சமநிலை காணப்படும்
2) மிகைக் கேள்வி ஏற்பட்டு விலை உயரும்
3) மிகைக் கேள்வி ஏற்பட்டு விலை குறையும்
4) மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை உயரும்
5) மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை குறையும்.

03) X பண்டத்தின் விலை ரூபா 50 இலிருந்து 30 ஆகக் குறையும் பொழுது Y பண்டத்திற்கான கேள்வி 1000 அலகுகளிலிருந்து 1200 அலகுகளாக அதிகரிக்கின்றது. X க்கும் Y க்கும் இடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1) 0.5 2) – 0.5 3) 2.0 4) – 2.0 5) 2.5


04) கீழேயுள்ள வரிப்படம் சமநிலையிலிருக்கும் ஒரு நுகர்வோர் பண்டத்திற்கான சந்தையைக் காட்டுகின்றது.




இப்பண்டத்தின் உற்பத்தியாளருக்கு மானியம் வழங்கும் அரசாங்கத்தினது ஒரு தீர்மானம் நன்மையளிப்பது

1) நுகர்வோருக்கு மட்டும்
2) உற்பத்தியாளருக்கு மட்டும்
3) நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சமமாக
4) உற்பத்தியாளருக்கும் மேலாக நுகர்வோருக்கு
5) நுகர்வோருக்கும் மேலாக உற்பத்தியாளருக்கு.

05) பண்டமொன்றின் உற்பத்தியின் மீது அரசாங்கம் ஒரு குறித்த நேரில் வரியை விதிக்கும் பொழுது, சந்தை நிரம்பல வளையி SS இலிருந்து $S_1S_1$ க்கு நகருவதைப் பின்வரும் வரிப்படம் காட்டுகின்றது.




உற்பத்தியாளர் நுகர்வோர் மீதும் வரியினது தாக்கம் எவ்வளவாகவிருக்கும்?

1) நுகர்வோர் ரூபா 1200 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக் கொள்வர்.
2) நுகர்வோர் ரூபா 800 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக் கொள்வர்.
3) நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக் கொள்வர்.
4) நுகர்வோர் ரூபா 800 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக் கொள்வர்.
5) நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 800 ஐயும் தாங்கிக் கொள்வர்.

06) ஒரு பொருளுக்கான கேள்விவிலை நெகிழ்ச்சியற்றதாகவிருக்குமாயின் மொத்த வருமானம்?

1) விலை உயர்த்தப்பட்டால் குறையும்.
2) விலை மாற்றம் எத்திசையில் ஏற்பட்டாலும் குறையும்.
3) விலை குறைக்கப்பட்டால் அதிகரிக்கும்.
4) எவ்வித விலைமாற்றம் ஏற்பட்டாலும் மாறாதிருக்கும்.
5) விலை உயர்த்தப்பட்டால் அதிகரிக்கும்.

07) ஒரு நிறுவனத்தின் நிலையான செலவுகள் இரட்டிக்குமாயின் எல்லைச் செலவு?

1) இரட்டிக்கும்
2) இரு மடங்கிற்கும் மேலாக அதிகரிக்கும்.
3) மாறாதிருக்கும்
4) 50 வீதத்தால் அதிகரிக்கும்.
5) 100 வீதத்தால் குறையும்.

08) சாதாரண இலாபம் என்பது எவ்வகை வருமான விகிதமாக வரையறுக்கப்படும்?

1) நிறுவனமொன்றின் ஒருசில வருட காலப்பகுதிக்கான வருமான விகிதம்.
2) தொழிலொன்றின் ஒருசில வருட காலப்பகுதிக்கான வருமான விகிதம்.
3) வளங்களை அவற்றின் இன்றைய உபயோகத்தில் தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் வருமான விகிதம்.
4) நிறுவனமொன்றினைச் சமநிலையில் வைத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் வருமான விகிதம்.
5) எல்லைச் செலவு எல்லை வருமானத்திற்குச் சமனாக இருக்கும் புள்ளியில் உற்பத்தி செய்யும் பொழுது உழைக்கப்படும் வருமான விகிதம்.

09) நிறைபோட்டி நிறுவனமொன்று இலாபத்தை உச்சப்படுத்துவது?

1) எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி மாறும் செலவிற்கு மேலாகவும் இருக்கும் பொழுது.
2) எல்லைச் செலவு விலைக்குச் சமமாகவும், விலை ஆகக் குறைந்த சராசரி நிலையான செலவிற்கு மேலாகவும் இருக்கும் பொழுது.
3) மொத்த வருமானம் உச்சமாகவிருக்கும் பொழுது.
4) சராசரி மாறும் செலவு ஆகக் குறைவாகவிருக்கும் பொழுது.
5) சராசரி மொத்தச் செலவு ஆகக் குறைவாகவிருக்கும் பொழுது.

10) பின்வருவனவற்றுள் எது ஒரு நிறைபோட்டித் தொழிலின் பண்பன்று?

1) கீழ்நோக்கிச்சரியும் தொழில் கேள்வி வளையி
2) தனிப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையி
3) ஒவ்வொரு நிறுவனமும் தனது வெளியீட்டு மட்டத்தை நிர்ணயித்தல்.
4) ஓரளவு வேறுபடுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள்.
5) தொழிலினது மொத்த நிரம்பலில் ஒவ்வொன்றும் ஒரு சிறு விகிதாசாரத்தை நிரம்பல் செய்யும் பல நிறுவனங்கள் இருத்தல்.

11) தனியுரிமைப் போட்டியிலிருக்கும் நிறுவனமொன்று நீண்ட காலத்தில்,

1) பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையியை எதிர்நோக்கும்.
2) சராசரி மொத்தச் செலவை (ATC) ஆகக்குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்கக் கூடிய தொகையை உற்பத்தி செய்யும்.
3) சராசரி மொத்தச் செலவை ஆகக்குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்கக் குறைவான தொகையை உற்பத்தி செய்யும்.
4) சராசரி மொத்தச் செலவை ஆகக்குறைந்ததாக்கும் தொகையினை உற்பத்தி செய்யும்.
5) சராசரி இலாபத்திலும் பார்க்கக் கூடிய இலாபத்தை உழைக்கும்.

## April 2004

12) நுகர்வோன் கேள்வி வளையியொன்றினை வரையும்பொழுது பின்வருவனவற்றுள் எது மாறாததாகக் கொள்ளப்படுவதில்லை?

1) கவனத்திலெடுக்கப்படும் பொருளின் விலை
2) துணை (இணை)ப் பொருட்களின் விலைகள்
3) பதிலீட்டுப் பொருட்களின் விலைகள்
4) உற்பத்திக் காரணிகளின் விலைகள்
5) நுகர்வோரது வருமானம்.

13) சந்தைக் தோல்வி என்பது?

1) கேள்வியானது நிரம்பலுக்குச் சமமாகவில்லாத நிலையாகும்.
2) சந்தையானது சாதனங்களைத் திறமையாக ஒதுக்கீடு செய்யாத நிலையாகும்.
3) நிறுவனங்கள் ஒரு தொழிலைவிட்டு வெளியேறுவதால் ஏற்படும் நிலையாகும்.
4) மத்தியரீதியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களோடு மட்டும் தொடர்புள்ள நிலையாகும்.
5) அரசாங்கமானது கட்டில்லாச் சந்தைச் சமநிலை விலையிலும் பார்க்க உயர்ந்த விலையை நிர்ணயிப்பது விளைவாகும்.

14) கணனிகளின் விலைகள் வீழ்ச்சியடைதல் மென்பொருள் சந்தையில் எவ்வித தாக்கத்தைக் கொண்டிருக்கும்?

1) கேள்வி அதிகரிப்பு 2) நிரம்பல் அதிகரிப்பு 3) கேள்வி குறைதல்
4) நிரம்பல் குறைதல் 5) கேட்கப்படும் அளவில் அதிகரிப்பு

15) நெகிழ்ச்சியுள்ள கேள்வியையும், நெகிழ்வற்ற நிரம்பலையும் கொண்ட ஒரு சந்தையின் மீது வரியொன்று விதிக்கப்படுமாயின்,

1) வரியின் பெருமளவு பளுவை நுகர்வோரே சுமப்பர்.
2) வரியின் பளுவை நுகர்வோர் மட்டுமே சுமப்பர்.
3) வரியின் பெருமளவு பளுவை விற்போரே சுமப்பர்.
4) வரியின் பளுவானது நுகர்வோர், விற்போர் என்போரிடையே சமமாகப் பகிரப்படும்.
5) வரியின் பளு எவ்வாறு பகிரப்படுமென்பதை நிர்ணயிக்க இயலாது.


16) பொருளொன்றின் விலையிலேற்படும் ஒரு மாற்றம் மொத்த வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடில்,

1) அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகும்.
2) அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாகும்.
3) விலைமாற்றத்தால் நுகர்வோர் பெருமளவிற்கு ஈர்க்கப்படமாட்டார்கள்.
4) அப்பொருளுக்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டதாகும்.
5) அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாகும்.

17) கேள்வி வளையியில் மாற்றமின்றியே பின்வரும் காரணிகளுள் எது நெல்லுக்கான விலையில் அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது?

1) நெல் விவசாயிகளினது உற்பத்தித் திறனில் ஓர் அதிகரிப்பு
2) நுகர்வோரது மெய்வருமானத்தில் ஓர் அதிகரிப்பு
3) விவசாயத் தொழிலாளர்களின் கூலிகளில் ஓர் அதிகரிப்பு.
4) நெற்சாகுபடிக்கான பசளை மானியத்தில் ஓர் அதிகரிப்பு
5) நெல்லைப் பிரதான உணவாகக் கொண்ட மக்கட் தொகையில் ஓர் அதிகரிப்பு


18) பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று இலங்கையில் பால் உற்பத்திக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஒரு மானியத்தைப் பிரகடனம் செய்வதாகக் கருதுக.




பின்வருவனவற்றுள் எது அரசாங்கத்திற்கான மானியச் செலவைக் குறித்து நிற்கும்?

1) $P_2P_3MY$ 2) $OP_2YQ_2$ 3) $OP_1XQ_2$ 4) $OP_3MQ_2$ 5) $P_1P_3MX$

19) பின்வரும் வரிப்படத்திற் காட்டியது போன்று, நெல்லுக்கான சந்தை இப்பொழுது $S_1S_1$ என்ற நிரம்பல் வளையியிலும் DD என்ற கேள்வி வளையியிலும் E புள்ளியில் சமநிலையில் இருக்கின்றது. 1ஆம் வருடத்தில் அரசாங்கமானது $OP_2$ என்ற உத்தரவாத இழிவு விலையைப் பிரகடனம் செய்து, இதனால் ஏற்படும் நெல்லின் மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்ய முன்வருகின்றது. 2ம் வருடத்தில் நெல் உற்பத்தியானது $S_2S_2$ என இடம்பெயர்ந்த நிரம்பல் வளையியினால் காட்டப்படும் அளவிற்கு உயருகின்றது.




2ஆம் வருடத்தில் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டிய நெல்லின் அளவு யாது?

1) $Q_3$ இலிருந்து $Q_4$ 2) $Q_2$ இலிருந்து $Q_3$ 3) $Q_2$ இலிருந்து $Q_4$
4) $Q_1$ இலிருந்து $Q_3$ 5) $Q_1$ இலிருந்து $Q_4$

20) வருமானங்கள் குறையும்பொழுது A என்ற பொருளின் கேட்கப்படும் அளவு அதிகரிக்குமாயின் அப்பொருள்?

1) ஓர் இணைப் பொருளாகும் 2) ஓர் பதிலீட்டுப் பொருளாகும்
3) ஒரு சாதாரண பொருளாகும் 4) ஓர் இழிவுப் பொருளாகும்
5) ஒரு நெகிழ்ச்சியற்ற பொருளாகும்.


21) நிறைபோட்டியில் தனிப்பட்ட ஓர் நிறுவனம் எதிர்நோக்கும் கேள்வி நெகிழ்ச்சியானது?

1) பூச்சியமாகவிருக்கும். ஏனெனில், அந்நிறுவனம் தனித்துவம் வாய்ந்த ஒரு பொருளை உற்பத்தி செய்கிறது.
2) பூச்சியமாகவிருக்கும். ஏனெனில், ஓரினத்தன்மை வாய்ந்த ஒரு பொருட்களை ஏனைய பல நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன.
3) எல்லையற்றதாகவிருக்கும். ஏனெனில் அந்நிறுவனம் தனித்துவம் வாய்ந்த ஒரு பொருளை உற்பத்தி செய்கின்றது.
4) எல்லையற்றதாகவிருக்கும். ஏனெனில் ஓரினத்தன்மை கொண்ட பொருட்களை ஏனைய பல நிறுவனங்களும் உற்பத்தி செய்கின்றன.
5) பூச்சியத்திற்கும், எல்லையற்ற நெகிழ்ச்சிக்கும் இடைப்பட்டதாகவிருக்கும். ஏனெனில் அத்தொழிலில் பல நிறுவனங்கள் இருக்கின்றன.

22) நிறுவனமொன்று எவ்வெளியீட்டு மட்டத்தில் எப்பொழுதுமே அசாதாரண இலாபத்தைச் சம்பாதிக்கும்?

1) எல்லை வருமானம் எல்லைச் செலவிற்குச் சமமாகவிருக்கும்போது
2) மொத்தச் செலவு மொத்த வருமானத்திலும் கூடுதலாகவிருக்கும்போது
3) சராசரி வருமானம் சராசரிச் செலவிலும் உயர்வாகவிருக்கும்போது
4) சராசரி மாறும் செலவு சராசரி வருமானத்திலும் குறைவாக இருக்கும்போது
5) சராசரி செலவு வீழ்ச்சியடையும்போது

23) இங்கு தரப்பட்டுள்ள வரிப்படத்தில் சந்தைக் கேள்வியானது எல்லா விலைகளிலுமே நிரம்பலிலும் பார்க்கக் குறைவாக உள்ளது. சமூகம் OQ அலகுகளைக் கொள்வனவு செய்யவேண்டுமென அரசாங்கம் விரும்புமாயின்,





1) $OP_1$ இலும் பார்க்க விலை உயரக்கூடாதென விதிக்க வேண்டும்.
2) நிரம்பலாளர் $OP_4$ விலையை விதிக்க அனுமதிக்க வேண்டும்.
3) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_2P_3$ உற்பத்தி மானியம் அளிக்க வேண்டும்.
4) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_1P_3$ உற்பத்தி மானியம் அளிக்க வேண்டும்.
5) விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_1P_4$ உற்பத்தி மானியம் அளிக்க வேண்டும்.

24) கேள்வி விதிக்கு அமைய,
1) ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவுக்கும் இடையே நேர்க்கணியத் தொடர்பு உண்டு.
2) ஒரு பொருளினது விலைக்கும் அதன் கேட்கப்படும் அளவுக்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு உண்டு.
3) கேள்விலேற்படும் விலை அதிகரிப்பு விலை உயர்வுக்கும், அதிகரித்த அளவுக்கும் இட்டுச் செல்லும்.
4) கேள்விலேற்படும் தேய்வு குறைந்த விலைகளுக்கும் குறைந்த அளவுக்கும் இட்டுச் செல்லும்.
5) மேலே தரப்பட்ட 3, 4 என்ற இரண்டுமே சரியானவை.

## April 2005

25) கீழே தரப்பட்டுள்ள வரிப்படம் கோதுமை மாவுக்கான நிரம்பல் வளையியையும் (NS) கேள்வி வளையியையும் (TD) காட்டுகிறது.




பின்வரும் பரப்புகளுள் எது உற்பத்தியாளர் மிகையைக் காட்டுகின்றது?

1) NTE 2) TPE 3) NPE 4) NEQO 5) OPEQ

26) இழிவுப் பண்டம் ஒன்றிற்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி?
1) பூச்சியமாகும்
2) நெகிழ்வற்றது
3) அலகு நெகிழ்ச்சியாகும்
4) எதிர்க்கணியமானது
5) நேர்கணியமானது

27) உற்பத்தியாளரொருவர் மின்குமிழ் ஒன்றின் விலையை 5% இனால் குறைக்கிறார். அதன் விளைவாக மின்குமிழ்களின் விற்பனை அளவு 2% இனால் உயர்வடைகின்றது. மின்குமிழ்களுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி யாது?

1) - 0.4　　2) − 0.8　　3) − 2.5　　4) − 4.0　　5) − 10.0

28) உற்பத்தி பொருளொன்றுக்கான கேள்வியானது விலை நெகிழ்ச்சி கொண்டதாயின் மொத்த வருமானம்?

1) விலை உயர்த்தப்படும் பொழுது குறையும்.
2) விலை மாற்றத்தின் திசை எவ்வாறமையினும் அதிகரிக்கும்.
3) விலை உயர்த்தப்படும் பொழுது அதிகரிக்கும்.
4) விலை மாற்றம் எவ்வாறமையினும் மாற்றமடையாது இருக்கும்.
5) விலை குறைக்கப்படுமாயின் குறையும்.

29) பண்டமொன்றின் மீது அரசாங்கம் ஒரு இழிவு விலையினை விதிக்குமாயின்.

1) அதன் விளைவாக மிகை நிரம்பல் ஏற்படும்.
2) அதன் விளைவாக மிகைக் கேள்வி ஏற்படும்.
3) சமநிலை விலையில் வியாபாரம் நடைபெறும்.
4) வணிக நிறுவனங்கள் இவ்விலையில் தாம் விரும்பும் அளவினை விற்கும்.
5) நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.


30) "பண்டம் x இன் விலை வீழ்ச்சியடையுமாயின் அப்பண்டத்தின் மீதான மொத்த செலவீடு உயரும். ஆனால் வருமானம் வீழ்ச்சியடையுமாயின் அச்செலவீடு குறையும்".
பின்வருவனவற்றிலிருந்து மேற்போந்த கூற்றுக்குப் பொருத்தமான சரியான சேர்க்கையை இனங்காண்க.


| | பண்டம் **x** இற்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி | பண்டம் **x** இற்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | நெகிழ்ச்சியுடையது | எதிர்க்கணியமானது |
| 2. | நெகிழ்ச்சியுடையது | நேர்க்கணியமானது |
| 3. | நெகிழ்ச்சியற்றது | எதிர்க்கணியமானது |
| 4. | நெகிழ்ச்சியற்றது | நேர்க்கணியமானது |
| 5. | அலகு நெகிழ்ச்சியாகவிருக்கும் | நேர்க்கணியமானது |

31) பின்வரும் உற்பத்திக் காரணிகளுள் எது குறுகிய காலஓட்டத்தில் நிலையானதாகக் கருதப்படலாம்?

1) தாபனத்தின் இட அமைவு
2) ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை
3) நுகரப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை
4) உபயோகிக்கப்படும் காகிதாதிகளின் அளவு
5) உபயோகிக்கப்படும் மூலப்பொருட்களின் அளவு

32) கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள் X பண்டத்தின் நிரம்பலிலேற்படும் ஒரு நகர்வு Y பண்டத்தின் கேள்வியில் எவ்வாறு நகர்வு ஏற்படுகின்றது என்பதைக் காட்டுகின்றன.




பின்வரும் சோடிகளுள் எது X, Y பண்டங்களை பெருமளவிற்குக் குறிப்பதாகவிருக்கும்?

1) தேயிலையும் கோப்பியும்
2) பஸ் பயணமும் ரயில் பயணமும்
3) அரிசியும் கோதுமை மாவும்
4) சீனியும் கருப்புப்பட்டியும்
5) டயர்களும் டியூப்புகளும்


33) பின்வரும் அட்டவணை A, B, C, D, E என்ற ஐந்து வேறுபட்ட பொருட்களுக்கு இருவேறு வருமான மட்டங்களில் ஒரு வீட்டுத் துறையினது கேள்வியைக் காட்டுகின்றது.

| வருமானம் | கேட்கப்பட்ட பண்ட அலகுகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E |
| ரூ. 10,000 | 200 | 200 | 200 | 200 | 200 |
| ரூ. 12,000 | 200 | 240 | 260 | 280 | 300 |

மேலே தரப்பட்டுள்ள வருமான வீச்சில் எந்தப் பண்டத்திற்கு வீட்டுத்துறையின் வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சி ஒருமையாகவிருக்கும்?

1) A  2) B  3) C  4) D  5) E

34) கீழே தரப்பட்ட வரைபடம் X பண்டத்தின் கேட்கப்படும் தொகைக்கும் வருமானத்திற்குமுள்ள தொடர்பைக் காட்டுகின்றது.




மேற்படிவரைபடம் Xபண்டம் பின்வருவனவற்றுள் எந்தவகையானது என்பதைக் காட்டுகின்றது?

1) ஒரு இழிவுப் பண்டம்
2) ஒரு அத்தியாவசிய பண்டம்
3) ஒரு நியமப் பண்டம்
4) ஒரு ஆடம்பரப் பண்டம்
5) ஒரு இணைப் பண்டம்

35) ஒவ்வொரு மாதமும் ஒரு விவசாயி (தேனீ வளர்ப்போன்) 10 போத்தல் தேனை ஒவ்வொன்றும் ரூ. 400 இற்கு விற்கின்றான். ஒவ்வொரு மாதமும் அவன் போத்தல்களுக்காகவும், வேறு பொருட்களுக்காகவும் ரூ. 200உம், ஊழியத்துக்காக ரூ. 1000உம் செலுத்துகின்றான். அத்துடன் மாதமொன்றிற்கு ரூ. 500 இற்கு வாடகைக்கு விடக்கூடிய தனது சொந்த நிலத்தையும், தனது பண்ணையில் வேலை செய்யாது வேறெங்காவது வேலை செய்திருப்பானாயின் மாதமொன்றிற்கு ரூ. 1300ஐ உழைத்திருக்கக்கூடிய தனது நேரத்தையும் கையாளுகின்றான். அவனது மாதாந்த சிக்கன இலாபம் யாது?

1) ரூ. 4000 2) ரூ. 2800 3) ரூ. 2300 4) ரூ. 1300 5) ரூ.1000

36) நிறைபோட்டி நிறுவனமொன்றின் எல்லை வருவாய் எப்பொழுதும்,

1) சராசரி மொத்தச் செலவிற்கு
2) பண்டத்தின் விலைக்கு
3) சராசரி நிலையான செலவிற்கு
4) மொத்த வருவாயிற்கு
5) சராசரி மாறும் செலவிற்கு

சமமானதாகவிருக்கும்.

37) பின்வரும் தரவுகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் X பண்டத்தின் சந்தைக் கேள்வி, நிரம்பல் பட்டியலைக் காட்டுகின்றன.

| தலா அலகு விலை (ரூ) | கேட்கப்படும் தொகை (அலகுகள்) | நிரம்பல் செய்யப்படும் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 80 | 500 | 900 |
| 70 | 600 | 800 |
| 60 | 700 | 700 |
| 50 | 800 | 600 |
| 40 | 900 | 500 |

அரசாங்கம் இப்பொழுது X பண்டத்தின் உற்பத்தியாளருக்கு அலகொன்றிற்கு ரூ. 20 மானியத்தை அறிமுகம் செய்யுமாயின், புதிய சமநிலை விலை எதுவாகவிருக்கும்?

1) ரூ. 80 2) ரூ. 70 3) ரூ. 60 4) ரூ. 50 5) ரூ.40


## August 2007

38) அரிசிக்கான கேள்விக்கோடு கீழ்நோக்கிய சரிவுடையதாகும். அரிசிக்கான கேள்வி விலை நெகிழ்வற்றதாயின் அரிசி விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி?

1) அரிசியின் மிகை நிரம்பலை ஏற்படுத்தும்.
2) அரிசியின் கேள்வித் தொகையில் பாதிப்பை ஏற்படுத்தும்.
3) பாணின் மீதான மொத்தச் செலவீட்டில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
4) கோதுமை மாவின் விற்பனையில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
5) அரிசியின் மீதான மொத்தச் செலவீட்டில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.

39) இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் நிரம்பல் வளையி $S_1$இலிருந்து $S_2$ஆக மாற்றமடையக் காரணமாக அமைவது?

1) குறித்த பொருளின் கேள்வியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.
2) குறித்த பொருளின் மீது விதிக்கப்பட்ட பெறுமான வீதவரியில் (ad valorem tax) ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும்.
3) குறித்த பொருளின் மீது விதிக்கப்பட்ட பெறுமான வீதவரியில் (ad valorem tax) ஏற்படும் ஒரு அதிகரிப்பாகும்.
4) குறித்த பொருளின் மீது விதிக்கப்பட்ட அலகு வரியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும்.
5) குறித்த பொருளின் மீது உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் விலைகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.




40) பின்வரும் அட்டவணை சில பொருட்கள் சேவைகளுக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி பற்றிய விவரங்களைத் தருகிறது.


| வகை | கேள்வியின் விலை நெகிழ்ச்சி |
|---|---|
| மோட்டார் கார்கள் | - 1.5 |
| மோட்டார் சைக்கிள்கள் | - 1.0 |
| சினிமா நுழைவுச் சீட்டுக்கள் | - 0.4 |
| தீப்பெட்டிகள் | 0.0 |

தரப்பட்ட தகவல்களின்படி ஒவ்வொரு வகையினதும் விலைகளின் 1% அதிகரிப்பானது விற்பனை வருமானங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவது

1) மோட்டார் கார்கள் தொடர்பில் மட்டுமேயாகும்.
2) மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் மட்டுமேயாகும்.
3) சினிமா நுழைவுச் சீட்டுக்கள், தீப்பெட்டிகள் தொடர்பில் மட்டுமேயாகும்.
4) சினிமா நுழைவுச் சீட்டுக்கள் தொடர்பில் மட்டுமேயாகும்.
5) தீப்பெட்டிகள் தொடர்பில் மட்டுமேயாகும்.

41) இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடமானது போட்டிச் சந்தையொன்றில் மீனுக்கான கேள்வி அதிகரிப்பதனால் ஏற்படும் விளைவுகளைக் காட்டுகிறது. இவ்வதிகரிப்பின் காரணமாக,

1) உற்பத்தியாளர் மிகையும் நுகர்வோர் மிகையும் அதிகரிக்கும்.
2) உற்பத்தியாளர் மிகையும் நுகர்வோர் மிகையும் வீழ்ச்சியடையும்.
3) உற்பத்தியாளர் மிகை வீழ்ச்சியடையும் நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.
4) உற்பத்தியாளர் மிகை அதிகரிக்கும் நுகர்வோர் மிகை மாறாதிருக்கும்.
5) உற்பத்தியாளர் மிகையிலோ நுகர்வோர் மிகையிலோ மாற்றமேற்படா.



42) பொருளியல் வாடகை என்பது?

1) நிலத்தைப் பயன்படுத்துவதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் ஒரு கொடுப்பனவாகும்.
2) உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலைவாய்ப்பில் தொடர்ந்து வைத்திருக்கும் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளாகும்.
3) அரசாங்க சேவைகளைப் பயன்படுத்துதற் பொருட்டு மத்திய அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ஒரு கொடுப்பனவாகும்.
4) வளங்களின் அமையச் செலவின் பொருட்டு வழங்கப்படும் ஒரு இழப்பீடாகும்.
5) உற்பத்திக் காரணிகளை அவற்றின் தற்போதைய வேலைவாய்ப்பில் வைத்திருக்க அவசியமான கொடுப்பனவை விட மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளாகும்.

43) உற்பத்தியில் உள்ளாந்த செலவுகள் (implicit costs) இருக்குமாயின்,

1) கணக்கியல் இலாபம் பொருளியல் இலாபத்தைவிட உயர்வாக இருக்கும்.
2) பொருளியல் இலாபம் எப்போதும் பூச்சியமாக இருக்கும்.
3) பொருளியல் இலாபம் கணக்கியல் இலாபத்தைவிட உயர்வாக இருக்கும்.
4) கணக்கியல் இலாபம் எப்போதும் பூச்சியமாக இருக்கும்.
5) பொருளியல் இலாபமும் கணக்கியல் இலாபமும் சமனாகும்.

44) நுகர்வோர் ஆய்வொன்று மதுசாரக் குடிவகைகளின் விலையில் ஏற்படும் 20% அதிகரிப்பு செல்வந்தர்களின் மதுசாரக் குடிவகை நுகர்வை 3% இனாலும், வறியவர்களின் நுகர்வை 10% இனாலும் வீழ்ச்சியடையச் செய்யும் எனக் கண்டறிந்தது. இதிலிருந்து பெறக்கூடிய முடிவின்படி,

1) வறியவர்களைவிட செல்வந்தர்களே மதுசாரக் குடிவகைகள் மூலம் அதிகம் திருப்தியடைகின்றனர்.
2) செல்வந்தர்களுக்கு மதுசாரக் குடிவகை ஓர் இழிவுப் பொருளாகும்.
3) வறியவர்களுக்கு மதுசாரக் குடிவகை ஒரு சாதாரண பொருளாகும்.
4) வறியவர்களின் கேள்வி விலை நெகிழ்வுள்ள அதேவேளை செல்வந்தர்களின் கேள்வி விலை நெகிழ்வற்றதாகும்.
5) வறியவர்களினதும் செல்வந்தர்களினதும் கேள்வியானது விலை நெகிழ்வற்றதாகும்.


45) பின்வரும் தகவல்கள் நிறைபோட்டி நிறுவனமொன்றின் குறுங்கால மொத்த மாறும் செலவு அட்டவணையொன்றுக்குரியன ஆகும்.

| வெளியீடு | மொத்த மாறும் செலவு (ரூ.) |
|---|---|
| 1 | 5 |
| 2 | 20 |
| 3 | 40 |
| 4 | 70 |
| 5 | 110 |
| 6 | 160 |
| 7 | 220 |

5வது அலகு வெளியீட்டின் எல்லைச் செலவு

1) ரூபா 30 ஆகும். 2) ரூபா 40 ஆகும். 3) ரூபா 55 ஆகும.
4) ரூபா 90 ஆகும். 5) ரூபா 110 ஆகும்.

46) இங்குள்ள வரைபடமானது நகரசபைப் பிரதேசமொன்றில் பொதுப் போக்குவரத்திற்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது. இங்கு OP என்பது மாறா விலையாகும். (flat rate) இச் சேவையைப் பெற விரும்பும் சகலருக்கும் இந்நகர சபையானது அதனை இலவசமாக வழங்க முடிவு செய்யுமாயின் நுகர்வோர் மிகையானது,




1) MEP அளவினால் வீழ்ச்சி அடையும்
2) SPE அளவினால் அதிகரிக்கும்.
3) OPEQ அளவினால் அதிகரிக்கும்.
4) OPET அளவினால் அதிகரிக்கும்.
5) OSEQ அளவினால் அதிகரிக்கும்.

47) பின்வரும் அட்டவணை உற்பத்தி நிறுவனங்கள் ஐந்தின் உற்பத்திப் பொருட்களுக்குரிய நெருங்கிய பதிலீடுகளின் குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகங்களைக் காட்டுகின்றது.


| உற்பத்தி நிறுவனம் | குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|
| நிறுவனம் A | + 2.0 |
| நிறுவனம் B | + 1.0 |
| நிறுவனம் C | + 0.5 |
| நிறுவனம் D | + 0.4 |
| நிறுவனம் E | + 0.1 |

மேற்படி நிறுவனங்களில் எது அதிகூடிய சந்தைச் சக்தியைக் கொண்டிருக்கும்?

1) நிறுவனம் A 2) நிறுவனம் B 3) நிறுவனம் C
4) நிறுவனம் D 5) நிறுவனம் E

48) பின்வரும் வரைபடம் நுகர்வுப் பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது. $P_1$ என்பது ஆரம்பச் சமநிலை விலையாகும்.

விலையில் $P_1$ இலிருந்து $P_2$ வரையிலான அதிகரிப்பு ஏற்பட மிகவும் காரணமாக அமையக் கூடியது,




1) பதிலீடுகளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் மூலப்பொருட்களின் விலையில் ஏற்படும் வீழ்ச்சியுமாகும்.
2) வருமானத்தில் ஏற்படும் ஓர் வீழ்ச்சியும் வட்டி வீதங்களில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் ஆகும்.
3) சகல ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட கூலிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.
4) வருமான வரி, பெறுமதிசேர் வரி என்பவற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.
5) சந்தையில் நிரம்பலானவர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.

49) பின்வரும் சந்தை நிலைமைகளில் எதில் நிறுவனமும் தொழிலும் ஒன்றாக இருக்கும்?

1) தனியுரிமை 2) சிலருரிமை 3) நிறைவில் போட்டி
4) நிறைபோட்டி 5) தனியுரிமை போட்டி

50) அளவுத்திட்டச் சிக்கனங்கள்,

1) எப்போதுமே அசாதாரண இலாபத்தில் ஓர் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும்.


2) சராசரிச் செலவை அதிகரிக்கும்.

3) பல்தேசியக் கம்பனிகளுக்கு நன்மை பயக்கும்.

4) நீண்டகால சராசரிச் செலவை வீழ்ச்சியடையச் செய்யும்.

5) வெளியீட்டில் வீதாசார அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும்.

51) கீழுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அரசாங்க வரிவிதிப்பொன்று நிரம்பல் வளையியை SS இலிருந்து $S_1S_1$ ஆக இடம்பெயரச் செய்துள்ளது.




மொத்த வரிச்சுமையின் எந்தளவு உற்பத்தியாளர் மீது சுமத்தப்படும்?

1) ரூபா 120 2) ரூபா 160 3) ரூபா 280 4) ரூபா 320 5) ரூபா 480

52) பின்வருவனவற்றில் எப்பண்பு நிறுவனமொன்று நிறைபோட்டி நிலைமைகளின் கீழ் இயங்குவதைக் குறித்துக் காட்டுகின்றது?

1) எல்லைச் செலவு வளையி சராசரிச் செலவு வளையினை அதன் குறைந்த மட்டப்புள்ளியில் வெட்டிச் செல்கிறது.

2) நிறுவனம் விளம்பரம் செய்வதில்லை.

3) எல்லைச் செலவு சராசரிச் செலவுக்கு சமப்படுகிறது.


4) நிறுவனம் எப்போதும் உத்தம வெளியீட்டை மேற்கொள்கிறது.

5) சாதாரண இலாபம் உழைக்கப்படுகிறது.

53) போட்டித் தன்மை வாய்ந்த ஊழிய சந்தையொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகளை இவ்வரைபடம் காட்டுகின்றது.

சந்தை சமநிலையில் உள்ளபோது பின்வருவனவற்றில் எப்பகுதிகள் பொருளியல் வாடகையையும் மாற்றல் வருவாய்களையும் அறவிடுகின்றன.

| | பொருளியல் வாடகை | மாற்றல் வருவாய்கள் |
|---|---|---|
| 1) | PEU | OQEP |
| 2) | PTE | OQEP |
| 3) | PTE | UTE |
| 4) | PEU | UTE |
| 5) | PTU | OTEQ |



54)


| வெளியீடு (அலகுகள்) | மொத்த செலவு (ரூபா) | மொத்த வருவாய் (ரூபா) |
|---|---|---|
| 1 | 8 | 30 |
| 2 | 18 | 50 |
| 3 | 30 | 66 |
| 4 | 46 | 80 |
| 5 | 65 | 90 |
| 6 | 90 | 96 |

மேலுள்ள அட்டவணையில் தரப்பட்ட தரவுகளுக்குரிய நிறுவனம் செயற்படுவது

1) நிறைபோட்டி மற்றும் நிலையான எல்லைச் செலவுகளின் கீழாகும்.
2) நிறைபோட்டி மற்றும் குறைந்து செல்லும் எல்லைச் செலவுகளின் கீழாகும்.
3) நிறைபோட்டி மற்றும் அதிகரிக்கும் எல்லைச் செலவுகளின் கீழாகும்.
4) நிறைவில் போட்டி மற்றும் அதிகரிக்கும் எல்லைச் செலவுகளின் கீழாகும்.
5) நிறைவில் போட்டி மற்றும் குறைந்து செல்லும் எல்லைச் செலவுகளின் கீழாகும்.

## August 2009

55) இங்குள்ள வரைபடம் பண்டமொன்றின் சந்தை நிரம்பல் வளையியைக் காட்டுகின்றது.
இவ்வளையியின் வழியே நிரம்பல் நெகிழ்ச்சியை விவரிக்கப் பொருத்தமான கூற்று எது?




1) சகல தொகைகளிலும் நிரம்பல் நெகிழ்ச்சி மாறாததாயும் ஒன்றைவிடக் கூடியதாயும் இருக்கும்.
2) சகல தொகைகளிலும் நிரம்பல் நெகிழ்ச்சி மாறாததாயும் ஒன்றைவிடக் குறைந்ததாகவும் இருக்கும்.
3) தொகை அதிகரிக்கும்போது நிரம்பல் நெகிழ்ச்சி குறைந்து செல்லும். அதேவேளை ஒன்றைவிடக் கூடுதலாக இருக்கும்.
4) தொகை அதிகரிக்கும்போது நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரித்து செல்லும். அதேவேளை ஒன்றைவிடக் கூடுதலாக இருக்கும்.
5) தொகை அதிகரிக்கும்போது நிரம்பல் நெகிழ்ச்சி குறைந்து செல்லும். அதேவேளை எதிர்க்கணியமானதாகவும் இருக்கும்.

56) கீழுள்ள அட்டவணை நிறுவனமொன்றின் மொத்த மற்றும் எல்லைச் செலவுகளைக் காட்டுகிறது.

| வெளியீடு அலகு | மொத்த செலவு (ரூ.) | எல்லைச் செலவு (ரூ.) |
|---|---|---|
| 1 | 200 | 20 |
| 2 | 215 | 15 |
| 3 | 225 | 10 |
| 4 | 240 | 15 |
| 5 | 260 | 20 |
| 6 | 285 | 25 |

TVC
0
20
35
45
60
80
105


5 அலகுகள் உற்பத்தி செய்வதற்கான சராசரி நிலையான செலவு யாது?

1) ரூபா 20 2) ரூபா 36 3) ரூபா 52 4) ரூபா 180 5) ரூபா 200

57) இங்கு தரப்பட்டுள்ள வரைபடமானது உள்நாட்டு உற்பத்தியினால் பகுதியளவிலும், இறக்குமதிகளால் பகுதியளவிலும் நிரம்பல் செய்யப்படும் ஒரு சந்தையினைக் காட்டுகின்றது. $S_h$ உள்நாட்டு நிரம்பலையும் பிற $S_m$ இறக்குமதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. னு சந்தைக் கேள்வியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

சந்தை சமநிலையில் உள்ளபோது மொத்தக் கேள்வித் தொகை யாது? இறக்குமதித் தொகை யாது?

| | மொத்தக் கேள்வித்தொகை | இறக்குமதியின் அளவு |
|---|---|---|
| 1) | OQ | MQ |
| 2) | OQ | OT |
| 3) | OT | MQ |
| 4) | OT | MT |
| 5) | OQ | MT |




58) நிறைபோட்டி நிறுவனமொன்று வாராந்தம் 200 முட்டைகளை உற்பத்தி செய்து முட்டை ஒன்றை ரூ. 25 இற்கு விற்கின்றது. இவ்வாராந்த 200 முட்டை வெளியீட்டின் செலவுகள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| மொத்த நிலையான செலவு | = | ரூ. 2000 |
| மொத்த மாறும் செலவு | = | ரூ. 4000 |
| எல்லைச் செலவு | = | ரூ. 25 |

குறுங்காலத்தில் நிறுவனம் தனது இலாபத்தை உச்சப்படுத்த அல்லது நட்டங்களை இழிவுபடுத்த யாது செய்யும்?

1) விலையினை அதிகரிக்கும்.
2) வெளியீட்டை அதிகரிக்கும்.
3) வெளியீட்டை குறைக்கும்.
4) வெளியீட்டை தற்போதைய மட்டத்தில் பேணிச் செல்லும்.
5) உற்பத்தியை முழுமையாக நிறுத்தும்.


59) நிறைபோட்டி நிறுவனமொன்றின் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையி என்பதனாற் கருதப்படுவது யாதெனில்,

1) நிலவுகின்ற விலையில் அது எல்லையற்ற தொகையொன்றினை விற்க முடியும் என்பதாகும்.
2) விலையை அதிகரிப்பதன் மூலம் நிறுவனம் மொத்த வருமானத்தை உயர்த்த முடியும் என்பதாகும்.
3) நிறுவனம் வெளியீட்டை விரிவாக்கும்போது அதன் எல்லை வருமானம் வீழ்ச்சியடையும் என்பதாகும்.
4) உற்பத்தி செய்யப்படும் தொகை யாதாக இருப்பினும் மொத்த வருமானம் நிலையானதாக இருக்கும் என்பதாகும்.
5) நிறுவனம் உற்பத்தி செய்யத்தக்க எந்த வெளியீட்டு மட்டங்களாலும் உற்பத்திப் பொருள்களின் விலையானது பாதிக்கப்படமாட்டாது என்பதாகும்.

60) பொருளொன்றின் நுகர்வைக் குறைக்க அரசாங்கம் விற்பனை வரியொன்றை விதிக்கிறது. நுகர்வைக் குறைவடையச் செய்வதில் விலைக்கேள்வி நெகிழ்ச்சி மற்றும் விலை நிரம்பல் நெகிழ்ச்சி என்பவற்றின் எந்த இணைப்பு உயர்ந்தளவான தாக்கத்தைக் கொண்டிருக்கும்?

1) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும்
2) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும்
3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வுள்ள ~~கேள்வியும்~~ நிரம்பலும்.
4) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும்
5) அலகு நெகிழ்வுள்ள கேள்வியும் அலகு நெகிழ்வுள்ள நிரம்பலும்

61) இங்கு தரப்பட்டுள்ள வரிப்படத்தில் அரசாங்கம் பொருளொன்றின் மீது நேரில் வரியொன்றை விதிப்பதனால், நிரம்பல் வளையி $S_1$ இலிருந்து $S_2$ ஆக இடம்பெயர்ந்துள்ளது. அரசாங்கத்தின் வரிவருமானமானது காட்டப்பட்டுள்ள பிரதேசம்




1) NFJK ஆகும்.
2) OGHL ஆகும்.
3) FGHJ ஆகும்.
4) NGHK ஆகும்.
5) FEHG ஆகும்.

## August 2010

62) பின்வருவனவற்றுள் எந்த நிலைமை போட்டிச் சந்தையொன்றின் சமநிலை விலையில் ஓர் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும்?

1) கேள்வி பூரண நெகிழ்வுள்ளநிலையில் நிறுவனங்களின் ஊழியச் செலவுகள் அதிகரித்தல்.
2) கேள்வி பூரண நெகிழ்வற்ற நிலையில் நிறுவனங்களின் ஊழியச்செலவுகள் வீழ்ச்சியடைதல்.
3) கேள்வி பூரண நெகிழ்வற்ற நிலையில் நிறுவனங்களின் ஊழியச்செலவுகள் அதிகரித்தல்.
4) நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளநிலையில் பதிலீட்டுப் பொருளொன்றின் விலை வீழ்ச்சியடைதல்.
5) நிரம்பல் பூரண நெகிழ்வற்றநிலையில் நிரப்புப் பொருளொன்றின் விலை அதிகரித்தல்.

63) செல்லிடத் தொலைபேசிக் கம்பனியொன்று 'அபிமானம்' என்றழைக்கப்படும் சிறப்புச் சேவைப் பொதியொன்றுக்கு ஒரு மில்லியன் வாடிக்கையாளரைக் கொண்டுள்ளது. இச்சேவையின் பொருட்டு ஒவ்வொரு வாடிக்கையாளரும் ரூபா 100 மாதாந்த கட்டணத்தைச் செலுத்துகிறார். அபிமானம் சேவைப் பொதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சியானது – 4.0 ஆகுமெனக் கம்பனி மதிப்பீடு செய்கிறது. கம்பனி மாதாந்த கட்டணத்தை ரூபா 25 இனால் குறைக்குமாயின், மொத்த வருவாயானது,

1) ரூபா 100 மில்லியனால் அதிகரிக்கும்
2) ரூபா 75 மில்லியனால் அதிகரிக்கும்
3) ரூபா 50 மில்லியனால் அதிகரிக்கும்
4) ரூபா 50 மில்லியனால் வீழ்ச்சியடையும்
5) ரூபா 100 மில்லியனால் வீழ்ச்சியடையும்.

64) விலை மாற்றமொன்றின் பதிலீட்டு விளைவென்பது,


1) மெய்வருமானம் மாறாநிலையில், முழுவிலையில் (absolute price) ஏற்படும் ஒரு மாற்றத்திற்கான விளைவாகக் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றமாகும்.
2) பணவருமானம் மாறாநிலையில், சார்புவிலையில் (relative price) ஏற்படும் ஒரு மாற்றத்திற்கான விளைவாகக் கேள்வித் தொகையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.

3) பயன்பாடு மாறாநிலையில், சார்புவிலையில் ஏற்படும் ஒரு மாற்றத்தின் விளைவாகக் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றமாகும்.

4) சார்பு விலைகள் மாறாநிலையில், மெய்வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றத்தின் விளைவாகக் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்றமாகும்.

5) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களின் சார்பு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றத்தின் விளைவாகக் கேள்வித் தொகையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.


65)




மேலுள்ள வரைபடம் விவசாயப் பொருளொன்றுக்கான சந்தை கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது. அரசாங்கம் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதன் மூலம் விலையினை OM மட்டத்தில் வைத்திருக்க ஆதரவளிக்கிறது. அரசாங்கமானது தற்போது இவ்விலை ஆதரவினை நீக்கிக் கொள்ளுமாயின் அந் நடவடிக்கையாளர் அரசாங்கத்தின் செலவீட்டினை,

1) NUT அளவினால் வீழ்ச்சியுறச் செய்யும் 2) NUTS அளவினால் வீழ்ச்சியுறச் செய்யும்
3) STQR அளவினால் வீழ்ச்சியுறச் செய்யும் 4) NUQR அளவினால் வீழ்ச்சியுறச் செய்யும்
5) PMUT அளவினால் வீழ்ச்சியுறச் செய்யும்.

66) வரைபடமானது நிறுவனமொன்று மூலதனம் மற்றும் ஊழியம் என்பவற்றை உள்ளடக்கிய சகல உற்பத்திக் காரணிகளையும், அதிகளவில் வேலைக்கு அமர்த்தும்போது அதன் சராசரி மொத்தச் C ... ாட்டுகிறது.




நிறுவனமானது தனது வெளியீட்டினை $OQ_1$ இலிருந்து $OQ_2$ வாக அதிகரிக்கும்போது இவ்வரைபடமானது

1) தனியுரிமைச் சக்தியின் நன்மைகளைக் காட்டுகிறது.
2) அதிகரித்த சிறப்புத் தேர்ச்சியின் நன்மைகளைக் காட்டுகிறது.
3) அளவுத்திட்ட சிக்கனமிலிகளைக் காட்டுகிறது.
4) அதிகரிக்கும் அளவுத்திட்ட சிக்கனங்களைக் காட்டுகிறது.
5) அதிகரித்த உற்பத்தி வினைத்திறனைக் காட்டுகிறது.

67) குறுங்கால சராசரி வருவாயானது சராசரி செலவைவிடக் குறைவாக இருப்பினும் நிறுவனம் தொழிலில் நீடித்திருக்க வேண்டுமாயின் அதன் சராசரி வருமானம்?

1) சராசரி நிலையான செலவைவிட உயர்வாக இருக்க வேண்டும்.
2) எல்லைச் செலவைவிட உயர்வாக இருக்க வேண்டும்.
3) சராசரி மாறுஞ் செலவைவிட உயர்வாக இருக்க வேண்டும்.
4) மாறுஞ் செலவுகள் மற்றும் நிலையான செலவுகளின் கூட்டுத்தொகையைவிட உயர்வாக இருக்க வேண்டும்.
5) எல்லை வருவாயைவிட உயர்வாக இருக்க வேண்டும்.

68) X என்ற நிறுவனம் நிறைபோட்டிச் சந்தையில் தனது உற்பத்தியினை விற்பனை செய்கிறது. Y என்ற நிறுவனம் சிலருரிமைச் சந்தையில் செயற்படுகிறது. Z என்ற நிறுவனம் ஒரு தூய தனியுரிமையாகும். அவற்றின் உற்பத்திப் பொருள் தொடர்பான பின்வரும் விளக்கங்களில் சரியானது எது?

| | நிறுவனம் X இன் உற்பத்தி | நிறுவனம் Y இன் உற்பத்தி | நிறுவனம் Z இன் உற்பத்தி |
|---|---|---|---|
| 1. | வேறாக்கம் செய்யப்பட்டது | வேறாக்கம் செய்யப்பட்டது | தனித்தன்மை வாய்ந்தது |
| 2. | தனித்தன்மை வாய்ந்தது | ஓரினத்தன்மை கொண்டது | வேறாக்கம் செய்யப்பட்டது |
| 3. | ஓரினத்தன்மை கொண்டது | வேறாக்கம் செய்யப்பட்டது | தனித்தன்மை வாய்ந்தது |
| 4. | தனித்தன்மை வாய்ந்தது | தனித்தன்மை வாய்ந்தது | வேறாக்கம் செய்யப்பட்டது |
| 5. | ஓரினத்தன்மை கொண்டது | தனித்தன்மை வாய்ந்தது | வேறாக்கம் செய்யப்பட்டது |

69) குறுங்கால நிறுவனமொன்று வெளியீட்டலகு ஒன்றிற்கான அதி தாழ்ந்த சராசரிச் செலவில் உற்பத்தியை மேற்கொள்வதாகக் கருதுக. வெளியீட்டில் ஏற்படும் சிறியதொரு வீழ்ச்சியானது நிறுவனத்தின் எல்லைச் செலவு, சராசரிச் செலவு மற்றும் மொத்தச் செலவுகளில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும்?

| | எல்லைச் செலவு | சராசரிச் செலவு | மொத்தச் செலவு |
|---|---|---|---|
| 1. | வீழ்ச்சி | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 2. | வீழ்ச்சி | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 3. | அதிகரிப்பு | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 4. | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 5. | அதிகரிப்பு | அதிகரிப்பு | வீழ்ச்சி |

## August 2011 New

70) உற்பத்திப் பொருளொன்றின் கேள்வி வளையியில் ஒரு வலப்புற நகர்வுக்கு ஏதுவாக அமையக் கூடியது?

1) கிட்டிய பதிலீடொன்றின் விலை வீழ்ச்சியாகும்.
2) கருதப்படும் பொருளின் விலையில் ஏற்படும் வீழ்ச்சியாகும்.
3) வருமான அதிகரிப்பாகும்.
4) நிரப்புப் பொருளொன்றின் விலை அதிகரிப்பாகும்.
5) உற்பத்திச் செலவு அதிகரிப்பாகும்.

71) பின்வருவனவற்றில் கேள்வி வளையியை வரையும்போது நிலையாகவுள்ளதாகக் கருதப்படாதது எது?

1) நுகர்வோரின் பண வருமானம்
2) நுகர்வோரின் சுவை
3) கருதப்படும் பொருளின் விலை
4) பதிலீடுகளின் விலைகள்
5) நிரப்புப் பொருள்களின் விலைகள்.


72) குறிப்பிட்டதொரு சாதாரண பொருளின் கேள்வியானது விலையுடன் எதிர்க்கணியரீதியில் தொடர்புபட்டுள்ள அதேவேளை நிரம்பலானது விலையுடன் நேர்க்கணியரீதியில் தொடர்புபட்டு உள்ளது. தரப்பட்ட காலப் பகுதியொன்றில் 5000 அலகுகள் அலகொன்றிற்கு ரூ. 50 வீதம் விற்கப்பட்டன. பின்னர் வந்த ஒரு காலப்பகுதியில் 8000 அலகுகள் அலகொன்றிற்கு ரூ. 60 வீதம் விற்கப்பட்டன. பின்வருவனவற்றில் இம்மாற்றத்திற்குக் காரணமாக அமையத்தக்கது எது?

1) நிரப்புப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
2) பதிலீடொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
3) பொருளின்மீது விற்பனை வரியொன்று விதிக்கப்படல்.
4) உள்ளீடுகளின் உற்பத்தித் திறனில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
5) மூலப்பொருள் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

73) நிறுவனமொன்று உற்பத்தி செய்த பொருளொன்றின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி – 0.8 ஆகும். இந்நிறுவனம் உற்பத்திப் பொருளின் விலையை உயர்த்துமாயின் அதன் வருவாய்.

1) அதிகரிக்கும்
2) வீழ்ச்சியடையும்
3) மாறாதிருக்கும்
4) 8% தினை விடக் கூடுதலாக வீழ்ச்சியடையும்
5) 8% தினை விடக் குறைவாக வீழ்ச்சியடையும்

74) இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடத்தில் நிரம்பல் வளையியின் வழியே நிலவும் விலை நெகிழ்ச்சியைச் சரியாக விவரிக்கும் கூற்று எது?




1) எல்லா நிரம்பல் தொகைகளின் போதும் நெகிழ்ச்சி ஒன்றைவிடக் கூடுதலாகவும் மாறாததாகவும் இருக்கும்.
2) எல்லா நிரம்பல் தொகைகளின் போதும் நெகிழ்ச்சி ஒன்றைவிடக் குறைவாகவும் மாறாததாகவும் இருக்கும்.
3) எல்லா நிரம்பல் தொகைகளின் போதும் நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமனாகக் காணப்படும்.
4) நிரம்பல் தொகை அதிகரிக்கும்போது நெகிழ்ச்சி வீழ்ச்சியடையும்.
5) நிரம்பல் தொகை அதிகரிக்கும்போது நெகிழ்ச்சி அதிகரிக்கும்.

75) சந்தையொன்று சமநிலையில் உள்ளதாக வரைவிலக்கணப்படுத்தப்படுவது,


1) மிகக் குறைந்த செலவில் உச்ச வெளியீடு பெறப்படும் போதாகும்.
2) உற்பத்தியாளன் மிகை உச்சப்படுத்தப்படும் போதாகும்.
3) விலைகள் அவற்றின் சாத்தியமான குறைந்த மட்டத்தில் உள்ள போதாகும்.
4) நுகர்வோன் திருப்தி உச்சப்படுத்தப்படும் போதாகும்.
5) சந்தைவிலை மாற்றமடைவதற்கான ஏதுநிலை இல்லாத போதாகும்.

76) பொருளொன்றின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாக கருதப்படின் அப்பொருள் வெளியீட்டின் மீது விதிக்கப்படும் ஏதாவதொரு வரியானது,

1) நிரம்பல் வளையியின் இட அமைவினை மாற்றாது
2) நிரம்பல் வளையியை வலப்புறமாக நகர்த்தும்.
3) கேள்வி வளையியை வலப்புறமாக நகர்த்தும்.
4) உற்பத்தியாளரால் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்.
5) வரியின் முழு அளவினால் பொருளின் விலையை உயர்த்தும்.

77) பின்வரும் வரைபடத்தில் DD என்பது பல்கலைக்கழக சமூகமொன்று பேரூந்துச் சேவைக்கான கேள்வியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.


பயணமொன்றிற்கான கட்டணம் OP ஆகவும், பயணங்களின் எண்ணிக்கை ON ஆகவும் இருந்தது. பல்கலைக்கழக அதிகாரிகள் பேரூந்து சேவையை கட்டணமின்றி வழங்கத் தீர்மானிப்பார்களாயின் அதன் காரணமாக பயணங்களின் எண்ணிக்கை OM ஆக அதிகரிக்கும். இந்நிலையில் நுகர்வோர் மிகை எவ்வாறு மாற்றமடையும்?




1) A யிலிருந்து A + C ஆக மாறும்.
2) A யிலிருந்து B + C ஆக மாறும்.
3) A யிலிருந்து A + B + C ஆக மாறும்.
4) B யிலிருந்து A ஆக மாறும்.
5) A+ B யிலிருந்து A + B + C ஆக மாறும்.

78) பின்வரும் வரைபடம் அரிசிக்கான கேள்வி, நிரம்பல் வளையிகளையும் E புள்ளியில் சந்தைச் சமநிலையையும் காட்டுகிறது. ஓரலகு அரிசிக்கு $P_1$ உயர்ந்தபட்ச விலையை விதிக்க அரசாங்கம் தீர்மானிப்பதாகக் கொள்க.

உயர்ந்தபட்ச விலைகள் கொள்கையினால் ஏற்படக்கூடிய மிகச் சாத்தியமான விளைவு எது?




1) JK அளவினால் அரிசிக்கு மிகை நிரம்பல் காணப்படும்.
2) $OQ_2$ அளவினால் அரிசிக்கு பற்றாக்குறை நிலவும்.
3) அரிசிக்கான சமநிலை விலை $OP_2$ வுக்குக் கூடுதலாக அதிகரிக்கும்.
4) அரிசியின் விலை $OP_1$ இனை விடக் குறைவடையும்.
5) JK அளவினால் அரிசிக்கு மிகைக் கேள்வி நிலவும்.

79) "குறைந்து செல்லும் விளைவு விதி" தொழிற்படுவதை பின்வருவனவற்றில் எக்கூற்று சிறப்பாக விபரிக்கின்றது?

1) பொருளொன்றின் நுகர்வு அதிகரிக்கும்போது மொத்தத் திருப்தியானது குறைந்து செல்லும் வீதத்தில் அதிகரிக்கும்.
2) ஒரு நிலையான காரணியுடன் மாறும் காரணியினை அதிகளவில் இணைக்கும்போது மொத்த உற்பத்தி குறைந்து செல்லும் வீதத்தில் அதிகரிக்கும்.
3) உற்பத்தியின் சகல காரணிகளும் அதிகரிக்கப்படும்போது மொத்த உற்பத்தி குறைந்து செல்லும் வீதத்தில் அதிகரிக்கும்.
4) ஒரு நிலையான காரணியுடன் மாறும் காரணியினை அதிகளவில் இணைக்கும்போது உற்பத்தியின் எல்லைச் செலவு வீழ்ச்சியடையும்.
5) சகல காரணிகளும் சம விகிதாசாரத்தில் அதிகரிக்கப்படும்போது உற்பத்தியின் எல்லைச் செலவு அதிகரிக்கும்.

80) X பொருளை உற்பத்தி செய்வதற்கான குறுங்கால எல்லைச் செலவு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| x பொருள் அலகு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| எல்லைச் செலவு (ரூ.) | 30 | 20 | 16 | 24 | 40 | 56 | 64 |

மொத்த நிலையான செலவு ரூ. 30 ஆயின் எந்த உற்பத்தி மட்டத்தில் குறுங்கால சராசரி மொத்த செலவு வளையி (ATC) அதன் அதிதாழ்ந்த புள்ளியில் இருக்கும்?

1) 2 அலகுகள் 2) 3 அலகுகள் 3) 4 அலகுகள்
4) 5 அலகுகள் 5) 6 அலகுகள்

81) பின்வருவனவற்றில் நிறைபோட்டி நிலையுடன் பொருந்தாதது எது?
1) அதிக எண்ணிக்கையிலான உற்பத்தியாளரும் நுகர்வோரும் காணப்படுவர்.
2) தனித்தனி நிறுவனங்கள் விளம்பர நடவடிக்கையில் ஈடுபடும்.
3) ஒரேயொரு சந்தைவிலை மாத்திரமே காணப்படும்.
4) ஓரினத்தன்மை வாய்ந்த பொருள் காணப்படும்.
5) ஒவ்வொரு நிறுவனமும் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையை எதிர்நோக்கும்.

82) நிறைபோட்டி நிறுவனமொன்று சமநிலையில் உள்ளபோது அதன் சராசரி வருவாய்?
1) எல்லை வருவாயைவிடக் குறைவாக உள்ளதுடன் அவ்விரண்டும் நேர்க்கணியமாக இருக்கும்.
2) எல்லை வருவாய்க்குச் சமமாக உள்ளதுடன் அவ்விரண்டும் பூச்சியமாக இருக்கும்.
3) எல்லை வருவாய்க்குச் சமமாக உள்ளதுடன் அவ்விரண்டும் நேர்க்கணியமாக இருக்கும்.
4) எல்லை வருவாயைவிடக் அதிகமாக உள்ளதுடன் எல்லை வருவாய் பூச்சியமாகும்.
5) எல்லை வருவாயைவிடக் அதிகமாக உள்ளதுடன் எல்லை வருவாய் நேர்க்கணியமாகும்.

## August 2011 Old


83) பின்வருவனவற்றில் குறித்தவொரு பொருளின்கேள்வி அதிகரிப்புக்கு இட்டுச்செல்லாதது எது?
1) வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு
2) அப்பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
3) பதிலீட்டுப் பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
4) நிரப்புப் பொருளின் விலை வீழ்ச்சியடைதல்.
5) அப்பொருளுக்கான சுவையில் ஏற்படும் அதிகரிப்பு

84) கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியைக் கொண்ட சாதாரண பொருளொன்று தொடர்பான பின்வரும் சேர்க்கைகளில் சரியானது எது?

| சேர்க்கை | வருமான கேள்வி நெகிழ்ச்சி | விலைக் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | நேர்க்கணியம் | நேர்க்கணியம் |
| 2. | நேர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| 3. | எதிர்க்கணியம் | எதிர்க்கணியம் |
| 4. | எதிர்க்கணியம் | நேர்க்கணியம் |
| 5. | ஒன்றிற்குச் சமன் | நெகிழ்வற்றது |

விலை
(ரூ./கி.கிராம்)

85) விவசாயப் பொருளொன்றுக்கான சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளன. கிலோகிராம் ஒன்றிற்கு ரூ. 50 குறைந்தபட்ச விலையினை விதித்து அதனால் ஏற்படும் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவ்விலையினை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கருதுக. இத்தலையீட்டின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு?





1) 200 மில்லியன் ரூபாவாகும்
2) 240 மில்லியன் ரூபாவாகும்
3) 360 மில்லியன் ரூபாவாகும்
4) 400 மில்லியன் ரூபாவாகும்
5) 600 மில்லியன் ரூபாவாகும்.

86) சிறப்பு உற்பத்தி (அலகு) வரியொன்றை விதிக்கும்போது வரிச்சுமையை உற்பத்தியாளரை விட நுகர்வோரே அதிகம் தாங்கும்நிலை பின்வரும் எச்சூழ்நிலையில் ஏற்படும்?

| | விலைக் கேள்வி நெகிழ்ச்சி | விலை நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | நெகிழ்வானது | நெகிழ்வற்றது |
| 2. | நெகிழ்வற்றது | நெகிழ்வானது |
| 3. | நெகிழ்வற்றது | பூரண நெகிழ்வற்றது |
| 4. | பூரண நெகிழ்வற்றது | நெகிழ்வுள்ளது |
| 5. | அலகு நெகிழ்ச்சி | நெகிழ்வுள்ளது |

87) உற்பத்தி நிறுவனமொன்று குறுங்கால செலவு வளையிகள் சில வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளன. வரைபடத்தின்படி பின்வருவனவற்றுள் குறுங்கால செலவு வளையி பற்றிய சரியான கூற்று எது?




1) 1 ஆம் வளையி சராசரி நிலையான செலவு (AFC) வளையியாகும்.
2) 2 ஆம் வளையி சராசரி மொத்தச்செலவு (ATC) வளையியாகும்.
3) 3 ஆம் வளையி எல்லைச் செலவு (MC) வளையியாகும்.
4) 4 ஆம் வளையி சராசரி மாறுஞ் செலவு (AVC) வளையியாகும்.
5) 4 ஆம் வளையி சராசரி நிலையாக செலவு (AFC) வளையியாகும்.

88) அரசாங்கம் அலகு மானியமொன்றை உற்பத்தியாளருக்கு வழங்குவதாகக் கருதுக. இந்நிலையில் விற்பனையில் மிகப்பெரிய அதிகரிப்பு பின்வரும் எச்சூழ்நிலையின் கீழ் ஏற்படக்கூடும்?

1) நிரம்பல் விலை நெகிழ்வுள்ளதாயிருத்தல்.
2) நிரம்பல் விலை நெகிழ்வற்றிருத்தல்.
3) கேள்வி விலை நெகிழ்வுள்ளதாயிருத்தல்.
4) கேள்வி விலை நெகிழ்வற்றிருத்தல்
5) கேள்வி மற்றும் நிரம்பல் இரண்டும் விலை நெகிழ்வற்றிருத்தல்.

89) குறுங்காலத்தில் உற்பத்தியில் நீடித்திருத்தற் பொருட்டு உற்பத்தி நிறுவனமொன்றிற்குத் தேவைப்படும் குறைந்த பட்ச விலையானது,

1) அதன் சராசரி நிலையான செலவுக்கு சமப்பட வேண்டும்.
2) அதன் சராசரி மாறும் செலவுக்கு சமப்பட வேண்டும்.
3) சராசரி நிலையான செலவு மற்றும் சராசரி மாறும் செலவு ஆகிய இரண்டின் கூட்டுத் தொகைக்கு சமப்பட வேண்டும்
4) சராசரி நிலையான செலவு மற்றும் எல்லைச் செலவு ஆகிய இரண்டின் கூட்டுத் தொகைக்கு சமப்பட வேண்டும்
5) எல்லைச் செலவுக்கு சமப்பட வேண்டும்.

90) சந்தைப் பொருளாதாரமொன்றில் இயங்கும் உற்பத்தி நிறுவனமொன்றின் பிரதான குறிக்கோளாக அமைவது


1) அளவுத்திட்ட சிக்கனங்களை அடைவதாகும்.
2) நுகர்வோன் திருப்தியினை உச்சப்படுத்துவதாகும்.
3) அதிகரிக்கும் ஊழியப்படைக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதாகும்
4) வள ஒதுக்கீட்டில் வினைத்திறனை அடைதலாகும்.
5) இலாபத்தை உச்சப்படுத்தலாகும்.

91) தனியுரிமைப் போட்டிச் சந்தையொன்றில் காணமுடியாத பண்பு எது?


1) ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்கள் காணப்படல்.
2) கடும்போட்டி நிலவுதல்.
3) சந்தையில் நுழைவதற்கும், வெளியேறுவதற்கும் காணப்படும் தடைகள் குறைவடைதல்.
4) கொள்வனவாளரும் விற்பனையாளரும் பெரும் எண்ணிக்கையில் இருத்தல்.
5) கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியை எதிர்நோக்குதல்.

92) குறித்த தொழிலொன்றின் ஊழியச் சந்தைத் தகவல்கள் வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளன. சந்தைக் கேள்வி வளையி $S_1$ இலிருந்து $S_2$ வாக மாற்றமடையுமாயின் மாற்றல் வருவாய்கள் மற்றும் பொருளியல் வாடகை என்பவற்றின் மீது ஏற்படும் தாக்கம் என்ன?

| | மாற்றல் வருவாய்கள் | பொருளியல் வாடகை |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | மாறாது | குறையும் |
| 3. | அதிகரிக்கும் | குறையும் |
| 4. | குறையும் | அதிகரிக்கும் |
| 5. | குறையும் | மாறாது |



## August 2012 New




93) அருகிலுள்ள வரைபடம் X பொருளின் சந்தைக் கேள்வியைக் காட்டுகிறது. A புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கிய ஓர் அசைவு ஏற்பட சாத்தியமான காரணமாக அமைவது

1) Y என்னும் பதிலீட்டுப் பொருளின் விலையில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பாகும்.
2) நுகர்வோனின் வருமானத்தில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பாகும்.
3) நுகர்வோனின் வருமானத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியாகும்.
4) X பொருளின் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியாகும்.
5) X பொருளின் நிரம்பலில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியாகும்.

94) பின்வருவனவற்றில் பொருளொன்றின் நிரம்பல் வளையியை இடப்புறமாக நகர்த்துவது எது?

1) உற்பத்தி செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
2) உற்பத்தி செலவில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
3) விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
4) விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
5) கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

95) ஏனையன மாறாநிலையில் நுகர்வோனொருவன் அரிசியின் விலை வீழ்ச்சியடைந்த பின்னரும் அரிசியின் மீதான தனது மொத்தச் செலவு மாறாதுள்ளதைக் காண்கிறான். இவ்விலை மாற்றம் தொடர்பில் பின்வருவனவற்றில் உண்மையான கூற்று எது?

1) அரிசியானது இந்நுகர்வோனுக்கு ஓர் இழிவுப் பண்டமாகும்.
2) விலை மாற்றத்தின் காரணமாக அரிசியின் மீதான இந்நுகர்வோனின் கேள்வி அதிகரித்துள்ளது.
3) அரிசிக்கான இந்நுகர்வோனின் கேள்வி பூரணவிலை நெகிழ்வுள்ளது.
4) அரிசிக்கான இந்நுகர்வோனின் கேள்வி பூரணவிலை நெகிழ்வற்றது.
5) அரிசிக்கான இந்நுகர்வோனின் கேள்வி அலகுவிலை நெகிழ்ச்சி கொண்டது.

96) செயற்திறன் வாய்ந்த தளவிலையொன்றை (Price Floor) உருவாக்கும்போது

1) நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் அதிகரிக்கும்.
2) நுகர்வோன் மிகை அதிகரிக்கும் உற்பத்தியாளன் மிகை குறையும்.
3) நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் குறையும்.
4) நுகர்வோன் மிகை குறையும் உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்.
5) நுகர்வோன் மிகை உற்பத்தியாளன் மிகை என்பன பாதிக்கப்படா.


97) X பொருளின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும், X மற்றும் Y பொருள்களுக்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும் இருப்பின் X பொருள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?

1) Xபொருள் ஒரு சாதாரணபொருளாகும். அத்துடன் அது Y பொருளின் ஒரு பதிலீடாகும்.
2) Xபொருள் ஒரு சாதாரணபொருளாகும். அத்துடன் அது Y பொருளின் ஒரு நிரப்பீடாகும்.
3) X பொருள் ஒரு இழிவுப்பொருளாகும். அத்துடன் அது Y பொருளின் ஒரு பதிலீடாகும்.
4) X பொருள் ஒரு இழிவுப்பொருளாகும். அத்துடன் அது Y பொருளின் ஒரு நிரப்பீடாகும்.
5) Xபொருள் ஒரு சாதாரணபொருளாகும். அத்துடன் Yபொருளின் ஓர் இழிவுப்பொருளாகும்.

98) போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான கேள்வி சார்பளவில் விலை நெகிழ்வுள்ளதாகக் கருதுக. போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான நிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பின்வருவனவற்றில் எதனை ஏற்படுத்தும்?


1) விலையில் ஒரு வீழ்ச்சி மற்றும் மொத்தவருவாயில் ஓர் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
2) விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி மற்றும் மொத்தவருவாயில் ஓர் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.
3) போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கு மிகை நிரம்பல் ஏற்படும்.
4) போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கு மிகைக் கேள்வி ஏற்படும்.
5) விலையில் சார்பளவில் சிறிய ஒரு வீழ்ச்சி ஏற்படுவதுடன் சமநிலைத் தொகை மாறாதிருக்கும்.

99) அருகிலுள்ள வரைபடம் X பொருளின் சந்தையினைக் காட்டுகிறது. அரசாங்கமானது X பொருளின் ஒவ்வொரு அலகின் மீதும் தொகை வரியொன்றை விதிக்குமாயின் பின்வருவன-வற்றில் எது வரியின்பின் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை மற்றும் மீளமுடியா இழப்பு என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடையாக அமையும்?




| | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை | மீளமுடியா இழப்பு |
|---|---|---|---|
| 1) | A | G + F + E + H | D + E |
| 2) | A | H | D + E |
| 3) | A + B | G + F + E | C + D |
| 4) | A + B + C + D | G + F + E + H | D + E |
| 5) | A + B + C + D | H + F + C | E |

100) பின்வரும் வரைபடம் விவசாய உற்பத்தி யொன்றின் சந்தையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
அரசாங்கம் $OP_2$ வினை குறைந்தபட்ச விலையாக நிர்ணயிக்கிறது. அக்குறைந்த மட்ட விலையில் நிலவும் மிகைக் கையிருப்பினை அரசாங்கம் முழுமையாகக் கொள்வனவு செய்ததாகக் கருதுக. இந்நிலையில் விவசாயிகளின் மொத்த வருவாயாக அமையும் பகுதி?




1) $OP_2KQ_3$ ஆகும் 2) $OP_1ZQ_2$ ஆகும் 3) $OP_2XQ_1$ ஆகும் 4) $Q_1XYQ_2$ ஆகும்
5) $P_1P_2ZY$ ஆகும்.

101) ஒரு நிறுவனம் X பொருளை உற்பத்தி செய்யும் பொருட்டு நிலையான மூலதன அளவொன்றுடன் மாறும் அளவு ஊதியத்தைப் பயன்படுத்துகிறது. ஊழியத்திற்கு வழங்கப்படும் நாளாந்தக் கூலியின் அளவு உயருமாயின் அது நிறுவனத்தின் செலவுகளை எவ்வாறு பாதிக்கும்?

| மொத்த மாறும் செலவு | | மொத்த நிலையான செலவு | மொத்தச் செலவு |
|---|---|---|---|
| 1. | குறையும் | மாறாது | குறையும் |
| 2. | குறையும் | குறையும் | குறையும் |
| 3. | அதிகரிக்கும் | குறையும் | மாறாது |
| 4. | அதிகரிக்கும் | மாறாது | அதிகரிக்கும் |
| 5. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

102) நிறைபோட்டிக் கைத்தொழிலில் இயங்கும் நிறுவனமொன்றின் எல்லை வருவாய் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

1) அது நிலையானது
2) விற்கப்படும் வெளியீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க எல்லை வருவாய் உயரும்.
3) விற்கப்படும் வெளியீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்க எல்லை வருவாய் வீழ்ச்சியடையும்.
4) முதலில் அது அதிகரிக்கும் பின்னர் வீழ்ச்சியடையும்.
5) முதலில் அது வீழ்ச்சியடையும் பின்னர் அதிகரிக்கும்.

103) தனியுரிமைப் போட்டிச் சந்தையானது.

1) ஒரு தனி நிறுவனத்தைக் கொண்டுள்ள சந்தை அமைப்பாகும்.
2) சிறு எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்டுள்ள சந்தை அமைப்பாகும்.
3) ஓரினத்தன்மை கொண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும் சந்தை அமைப்பாகும்.
4) வேறாக்கம் செய்யப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யும் அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் காணப்படும் சந்தை அமைப்பாகும்.
5) விளம்பரம் காணப்படாத சந்தை அமைப்பாகும்.

## August 2012 Old

104) சிறிய நிறுவனமொன்று உலக சந்தையில் ஒரே விலையில் மூலப்பொருளின் எந்தளவையும் கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது. இதன் கருத்து யாதெனில் இந்நிறுவனம்,

1) மூலப்பொருளுக்கு பூரண நெகிழ்வுள்ள கேள்விக் கோட்டை எதிர்நோக்குகிறது.
2) மூலப்பொருளுக்கு பூரண நெகிழ்வற்ற கேள்விக் கோட்டை எதிர்நோக்குகிறது.
3) மூலப்பொருளுக்கு அலகு நெகிழ்ச்சியுள்ள கேள்விக் கோட்டை எதிர்நோக்குகிறது.
4) மூலப்பொருளுக்கு பூரண நெகிழ்வுள்ள நிரம்பல் கோட்டை எதிர்நோக்குகிறது.
5) மூலப்பொருளுக்கு பூரண நெகிழ்வற்ற நிரம்பல் கோட்டை எதிர்நோக்குகிறது.

105) பொருளொன்றின் விலை அதிகரிப்பு மற்றொரு பொருளின் கேள்வியை குறைக்குமாயின் அவ்விரு பொருள்களும்,

1) இழிவுப் பொருள்களாகும்
2) ஆடம்பரப் பொருள்களாகும்
3) சாதாரண பொருள்களாகும்
4) பதிலீட்டுப் பொருள்களாகும்
5) நிரப்புப் பொருள்களாகும்.

106) கைக்கடிகாரங்களுக்கான நிரம்பல் வளையியின் இடப்புற நகர்வுக்குக் காரணமாய் அமையக் கூடியது?

1) கைக்கடிகாரங்களின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
2) கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்யும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கூலியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
3) கைக்கடிகார உற்பத்தியுடன்தொடர்புபட்ட தொழில்நுட்பத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்
4) கைக்கடிகார உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உதிரிப்பாகங்களின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
5) சனத்தொகையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

107) கேள்வி வளையி $Q_d = 120 - 8P$ எனவும் சந்தைவிலை $P = 10$ எனவும் தரப்படுமாயின் நுகர்வோன் மிகை

1) 15 ஆகும் 2) 100 ஆகும் 3) 112 ஆகும் 4) 120 ஆகும்
5) 400 ஆகும்


108) பொருளொன்றின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சி – 1.7 ஆயின் நாம் பெறக்கூடிய முடிவு?

1) வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு குறித்த பொருளின் கேள்வியில் ஓர் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
2) இது நிச்சயமாக ஓர் அத்தியாவசியப் பொருளாகும்.
3) இது ஒரு சாதாரண பொருளாகும்.
4) விலையில் ஏற்படும் 1% வீழ்ச்சியானது பொருளின் கேள்வியில் 1.7% அதிகரிப்பினை ஏற்படுத்தும்.
5) வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி பொருளின் கேள்வியில் ஓர் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.

109) நிறைபோட்டிக் கைத்தொழிலில் இயங்கும் நிறுவனமொன்றின் குறுங்கால நிரம்பல் வளையியானது,

1) அதன் முழுமையான எல்லைச் செலவு வளையியாகும்.
2) எல்லைச் செலவு வளையியின் மேலுள்ள அதன் சராசரி செலவு வளையியாகும்.
3) எல்லைச் செலவு வளையியின் மேலுள்ள அதன் சராசரி மொத்தசெலவு வளையியாகும்.
4) அதன் சராசரி மொத்தசெலவு வளையியின் இழிவுப் புள்ளிக்கு மேலுள்ள எல்லைச் செலவு வளையியாகும்.
5) அதன் சராசரி மாறுஞ்செலவு வளையியின் இழிவுப் புள்ளிக்கு மேலுள்ள எல்லைச் செலவு வளையியாகும்.

110) அருகிலுள்ள வரைபடத்தில் உள்ளவாறு கேள்வி நிரம்பல் வளையிகளை எதிர்நோக்கும் போட்டித்தன்மை வாய்ந்த நிறுவனமொன்று,




1) உடனடியாகத் தொழிலை முடிவுறுத்த வேண்டும்.
2) எல்லைச் செலவு எல்லை வருவாய்க்குச் சமப்படும் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும்.

3) குறுங்காலத்தில் உற்பத்தி செய்ய வேண்டும். ஆனால் நீண்டகாலத்தில் உற்பத்தி செய்யக்கூடாது.

4) குறுங்காலத்திலும் நீண்டகாலத்திலும் தொடர்ந்து உற்பத்தி செய்யலாம்.

5) எல்லைச் செலவு சராசரி வருவாய்க்குச் சமப்படும் இடத்தில் உற்பத்தி செய்யலாம்.

111) நிறுவனமொன்று பூச்சிய பொருளியல் இலாபத்தை உழைக்குமாயின்,

1) அதன் வருவாய்கள் வெளிப்படையான (explicit) செலவுகளைச் செலுத்தப் போதுமானதாகும். ஆனால் உட்கிடையான (implicit) செலவுகளைச் செலுத்தப் போதுமானதன்று.


2) நிறுவன உரிமையாளர் தனக்கு ஒரு சம்பளத்தைப் பெற முடியாதிருக்கும்.

3) நீண்டகாலத்தில் தொழில் முடிவுறுத்தப்படும். ஆனால் குறுங்காலத்தில் தொடர்ந்து இயங்கும்.

4) நிறுவன உரிமையாளர் தான் செலவிட்ட மற்றும் முதலீட்டின் பொருட்டு ஒரு கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை அது காலம் மற்றும் முதலீட்டிற்கான அமையச் செலவுக்குச் சமமாகும்.

5) குறித்த நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தம் வெளியீட்டுத் தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை.


112)




மேலேயுள்ள வரைபடமானது 25 அலகு வெளியீட்டை மேற்கொள்ளும் போட்டித்தன்மை வாய்ந்த நிறுவனமொன்றின் செலவு வளையிகளைக் காட்டுகிறது. 25 அலகு உற்பத்தியை மேற்கொள்ளும் போதுள்ள மொத்த மாறும் செலவு, மொத்த நிலையான செலவுகள் எவை?

| | மொத்த மாறும் செலவு | மொத்த நிலையான செலவு |
|---|---|---|
| 1. | ரூ. 250 | ரூ. 300 |
| 2. | ரூ. 250 | ரூ. 375 |
| 3. | ரூ. 375 | ரூ. 500 |
| 4. | ரூ. 425 | ரூ. 550 |
| 5. | ரூ. 500 | ரூ. 625 |

113) வரைபடமானது பொருளொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.




சமநிலைப்பட்ட வெளியீட்டிற்காக நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள மொத்த பண அளவினைக் காட்டும் பகுதி எது?

1) OQEP 2) OTEQ 3) PEK 4) OKM 5) OKEQ

114) அட்டவணையானது ஐந்து கம்பனிகளின் உற்பத்திப் பொருள்கள் தொடர்பில் அவற்றின் நெருங்கிய பதிலீடுகளின் விலைகள் குறித்த குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி அளவுகளை காட்டுகிறது.

| கம்பனி | குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் |
|---|---|
| கம்பனி A | + 3.0 |
| கம்பனி B | + 2.5 |
| கம்பனி C | + 1.0 |
| கம்பனி D | + 0.8 |
| கம்பனி E | + 0.2 |

இத்தரவுகளின் அடிப்படையில் மிக உயர்வான சந்தைச் சக்தியைக் (market power) கொண்டுள்ள கம்பனி எது?

1) கம்பனி A 2) கம்பனி B 3) கம்பனி C 4) கம்பனி D 5) கம்பனி E

115) நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடைவது?

1) நிரம்பல் நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.
2) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்.
3) கேள்வி நெகிழ்வற்ற நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.
4) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.
5) கேள்வி அலகு நெகிழ்ச்சியுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்.

116) X என்பது ஒரு இழிவுப் பொருளாயின், வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது அப்பொருளின்,

1) கேள்வியைக் குறைக்கும், விலையைக் குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகை வீழ்ச்சியடையச் செய்யும்.
2) கேள்வியைக் குறைக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகை வீழ்ச்சியடையச் செய்யும்.
3) கேள்வியைக் அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.
4) நிரம்பலை அதிகரிக்கும், விலையைக் குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்.
5) கேள்வியைக் அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்.

117) தோடம்பழங்களுக்கான சந்தை சமநிலையில் உள்ளதாகக் கருதுக. தோடம்பழங்களின் நிரம்பல் வீழ்ச்சியடையும் அதேவேளை அவற்றுக்கான கேள்வி அதிகரிக்குமாயின், சந்தையில் தோடம்பழங்களின் விலை மற்றும் தொகை பற்றி நீர் என்ன கூற முடியும்?
1) விலை, தொகை ஆகிய இரண்டுமே அதிகரிக்கும்.
2) விலை அதிகரிக்கும் ஆனால் தொகையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்.
3) விலை, தொகை ஆகிய இரண்டுமே வீழ்ச்சியடையும்.
4) தொகை அதிகரிக்கும் ஆனால் விலையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்.
5) கேள்வி, நிரம்பல் வளையிகளில் ஏற்படும் மாற்றங்கள் ஒன்றையொன்று ஈடுசெய்து விடுவதால் விலையும் தொகையும் மாறாதிருக்கும்.

118) சிகரட்டுகளின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாக உள்ளதெனக் கருதுக. உற்பத்தி மீது கலால்வரி விதிக்கப்படுமாயின் அது பின்வருவனவற்றில் எவ்விதத்தில் விலை, தொகை மற்றும் சிகரட் மீதான நுகர்வோன் செலவு என்பதில் மாற்றத்தை ஏற்படுத்தும்?

| | விலை | தொகை | நுகர்வோரின் செலவீடு |
|---|---|---|---|
| 1. | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | குறையும் | குறையும் | குறையும் |
| 3. | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| 4. | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| 5. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

119) பிள்ளைகளை பகல் வேளைகளில் பராமரிக்கும் (daycare) நிலையங்களுக்கு அனுப்பும் செலவை ஈடுசெய்ய மானியமாகப் பயன்படுத்தக்கூடியவாறு ஒவ்வொரு பெற்றோருக்கும் அரசாங்கம் கூப்பன்களை வழங்குமாயின் பகல் வேளைகளில் பராமரிப்புச் சேவையினை வழங்கும் நிறுவனங்களின் சந்தையில் யாது நிகழுமென நீர் எதிர்பார்ப்பீர்?
1) பகல்வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி குறைவதோடு விலையும் வீழ்ச்சியடையும்.
2) பகல்வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி அதிகரிப்பதோடு விலையும் அதிகரிக்கும்.
3) பகல்வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் அதிகரிப்பதோடு அதன் விலை வீழ்ச்சியடையும்.
4) பகல்வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் வீழ்ச்சியடையும் அதேவேளை விலை அதிகரிக்கும்.
5) பகல்வேளைப் பராமரிப்புச் சேவைக்கு நிரந்தரமாக ஒரு பற்றாக்குறை நிலவும்.

120) நுகர்வோன் மிகை பூச்சியமாக மாறத் தேவையான நிபந்தனை எது?
1) கேள்வி பூரண விலை நெகிழ்வுள்ளது. 2) கேள்வி பூரண விலை நெகிழ்வற்றது.
3) நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளது. 4) நிரம்பல் பூரண நெகிழ்வற்றது.
5) கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது சார்பளவில் நிரம்பலின் விலை நெகிழ்ச்சியைவிட உயர்வானது.

121) "சாதாரண பொருளொன்றின்" விலை மற்றும் சந்தையில் அதன் விற்பனைத் தொகை இரண்டிலுமே ஏக காலத்தில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாக அமைவது?

1) பொருளின்மீது விதிக்கப்பட்டிருந்த பயனுறுதிமிக்க உயர்ந்தபட்ச விலையானது நீக்கப்பட்டமை.
2) பொருளின் உற்பத்தியில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றம்.
3) பொருளின்மீது வரி விதிக்கப்படல்.
4) பொருள் உற்பத்தியாளர்களுக்கு மானியமொன்று வழங்கப்படல்.
5) குறித்த பொருளின் பதிலீடொன்றின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி.

122) ஊழியத்தின் எல்லை உற்பத்தியானது ஊழியத்தின் சராசரி உற்பத்திக்குச் சமனாகும்போது

1) ஊழியத்தின் எல்லை உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
2) உற்பத்தியில் எல்லை செலவு உச்சத்திலிருக்கும்.
3) எல்லைச் செலவானது சராசரி மாறும் செலவின் அதிகுறைந்த மட்டத்திற்குச் சமனாகும்.
4) சராசரி மொத்தச் செலவு அதிகுறைந்த மட்டத்திலிருக்கும்.
5) ஊழியத்தின் மொத்த உற்பத்தி அதன் உச்சத்திலிருக்கும்.

123) நிறுவனமொன்று தனது ஊழியப்படையை 100 இலிருந்து 101 தொழிலாளர்களாக அதிகரிக்கும்போது அதன் நாளாந்தக் கூலியினை ரூபா 600 இலிருந்து ரூபா 650 ஆக அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்நிலைமையின்கீழ் ஊழியத்தின் நாளொன்றுக்கான எல்லைச் செலவு?

1) ரூபா 50 ஆகும் 2) ரூபா 650 ஆகும் 3) ரூபா 5650 ஆகும்
4) ரூபா 60000 ஆகும் 5) ரூபா 65650 ஆகும்.

124) நிறுவனமொன்று ஒரு வருட காலப்பகுதியில் பின்வரும் செலவுகளை மேற்கொண்டதாக பொருளியலாளரொருவர் கணிப்பீடு செய்கிறார்?

| செலவு வகை | செலவு (ஆயிரம் ரூபாயில்) |
|---|---|
| கூலிகளும் சம்பளங்களும் | 150 |
| உரிமையாளரின் நேரத்தின் அமையச் செலவு | 40 |
| உற்பத்தி உள்ளீட்டுப் பொருள்கள் | 80 |
| வாடகை | 30 |
| சந்தைப்படுத்தல் செலவுகள் | 20 |
| வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 25 |
| உரிமையாளர் வழங்கிய நிதிக்காக இழந்தவட்டி வருவாய் | 15 |

இத்தகவலின் அடிப்படையில்,

கணக்கியலாளரொருவரால் கணிப்பிடப்படும் மொத்தச் செலவைவிட பொருளியலாளரால் கணிப்பிடப்படும் மொத்தச் செலவு எந்த அளவினால் கூடுதலாக இருக்கும்?

1) ரூபா 30500 2) ரூபா 55000 3) ரூபா 85000 4) ரூபா 305000
5) ரூபா 360000

125) A என்னும் நிறுவனம் தனது வேலையாட்களை 250 இலிருந்து 200 ஆகக் குறைக்கிறது. இதன் விளைவாக அதன் வெளியீடானது நாளொன்றுக்கு 5000 அலகுகளிலிருந்து 4800 அலகுகளாக வீழ்ச்சியடைகிறது. B என்னும் நிறுவனம் தனது வேலையாட்களை 800 இலிருந்து 1000 ஆக அதிகரிக்கிறது. இதன் விளைவாக நிறுவனத்தின் வெளியீடு நாள் ஒன்றுக்கு 2000 அலகுகளிலிருந்து 2200 அலகுகளாக அதிகரிக்கிறது. இவ்விரு நிறுவனங்களிலுமுள்ள ஊழியர்களின் ஊழிய உற்பத்தித்திறனில் எத்தகைய மாற்றம் ஏற்படும்?

| நிறுவனம் A யின் உற்பத்தித்திறன் | | நிறுவனம் B யின் உற்பத்தித்திறன் |
|---|---|---|
| 1. | குறையும் | அதிகரிக்கும் |
| 2. | அதிகரிக்கும் | குறையும் |
| 3. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4. | குறையும் | குறையும் |
| 5. | அதிகரிக்கும் | மாறாதிருக்கும் |

## August 2013 Old

126) பொருளொன்றின் கேள்வி வீழ்ச்சியடையும் அதேவேளை அதன் உற்பத்தி செலவு குறைவடைகிறது. இப்பொருளின் விலை மற்றும் நிரம்பல் தொகை என்பவற்றின்மீது இவ்விரண்டினதும் கூட்டு விளைவு என்னவாக இருக்கும்?

| விலை | | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 1. | குறையும் | குறையும் |
| 2. | குறையும் | அதிகரிக்கும் |
| 3. | நிச்சயமற்றது | குறையும் |
| 4. | குறையும் | நிச்சயமற்றது |
| 5. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

127) பொருளொன்றின் கேள்வியானது அலகுவிலை நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளதுடன் அலகொன்றிற்கு ரூபா 20 விலையில் 4000 அலகுகளை நிறுவனம் விற்பனை செய்கிறது. நிறுவனம் அலகொன்றிற்கு ரூபா 5 விலையினை அறவிடுமாயின் நிறுவனம் எத்தொகையினை விற்பனை செய்யலாம்?

1) 10,000 அலகுகள் 2) 16,000 அலகுகள் 3) 20,000 அலகுகள்

4) 80,000 அலகுகள் 5) 100,000 அலகுகள்

128) பின்வரும் அட்டவணை இசை நிகழ்ச்சியொன்றின் நுழைவுச்சீட்டுக்களுக்கான கேள்வியைக் காட்டுகிறது. அரங்கத்தின் கொள்ளளவு 600 ஆசனங்களாகும்.

| நுழைவுச் சீட்டின் விலை (ரூபா) | கேள்வித் தொகை |
|---|---|
| 20 | 600 |
| 30 | 500 |
| 40 | 400 |
| 50 | 300 |
| 60 | 200 |

வருவாயை உச்சப்படுத்த நுழைவுச்சீட்டு ஒன்றுக்காக அறவிடப்படவேண்டிய விலை என்ன?

1) ரூபா 20 2) ரூபா 30 3) ரூபா 40 4) ரூபா 50 5) ரூபா 60

129) தளவிலை (price floor) தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது எது?

1) தளவிலையானது கேள்வி வளையியை இடப்புறம் நோக்கி நகர்த்தும்.
2) வினைத்திறனான தளவிலையொன்று அப்பொருளின் பற்றாக்குறையை ஏற்படுத்தும்.
3) தளவிலையானது பொருளின் நிரம்பல் வளையியை வலப்புறம் நோக்கி நகர்த்தும்.
4) தளவிலை வினைத்திறனுள்ளதாக அமைய வேண்டுமாயின் அது சமநிலை விலைக்கு மேலாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.
5) சமநிலை விலையினால் சுரண்டப்படும் நுகர்வோருக்கு உதவும் முகமாக அரசாங்கம் தளவிலையினை நிர்ணயிக்கிறது.

130) X மற்றும் Y ஆகியன நிரப்புப் பொருள்களாகும். Y பொருளின் நிரம்பலில் ஒரு அதிகரிப்பு ஏற்படுமாயின் X பொருளின் சமநிலை விலை மற்றும் தொகை என்பவற்றில் அதன் விளைவு யாது?

| | X பொருளின் சமநிலை விலை | X பொருளின் சமநிலைத் தொகை |
|---|---|---|
| 1. | குறையும் | குறையும் |
| 2. | குறையும் | அதிகரிக்கும் |
| 3. | அதிகரிக்கும் | குறையும் |
| 4. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5. | குறையும் | மாறாது |

131) ஒரு நிறுவனம் குறுங்காலத்தில் இயங்கும்போது,

1) அதன் மொத்தச் செலவும் மொத்த மாறும் செலவும் ஒரேயளவாக இருக்கும்.
2) வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி நிலையான செலவு அதிகரிக்கும்.
3) நிலையான உள்ளீடுகளின் அளவினை மாற்றியமைக்க முடியாது.
4) அது தனது மாறும் செலவுகளை மாற்றியமைக்க முடியாது.
5) மொத்தச் செலவுகள் மொத்த வருவாயைவிட உயர்வாக இருக்கும்.

132) குறுங்காலத்தில் இயங்கும் நிறைபோட்டி நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தும் (நட்டத்தைக் குறைக்கும்) நோக்கில் நிறுவனத்தை மூடிவிடத் தீர்மானிப்பது. சந்தை விலையானது,

1) அதிகுறைந்த மொத்தச் சராசரிச் செலவைவிடக் குறைவாக உள்ள போதாகும்.
2) அதிகுறைந்த சராசரி மாறும் செலவைவிடக் கூடுதலாகவும், அதிகுறைந்த சராசரிச் செலவைவிடக் குறைவாகவும் உள்ள போதாகும்.
3) அதிகுறைந்த சராசரி நிலையான செலவுக்குச் சமமாக உள்ள போதாகும்.
4) அதிகுறைந்த மொத்த சராசரிச் செலவுக்குச் சமமாக உள்ள போதாகும்.
5) அதிகுறைந்த சராசரி மாறும் செலவை விடக் குறைவாக உள்ள போதாகும்.

133) நிறைபோடிக் கைத்தொழிலில் இயங்கும் ஒரு நிறுவனத்தில் எல்லை வருவாய் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

1) அது நிலையானதாகும்.
2) அது விற்கப்படும் வெளியீட்டின் அதிகரிப்பிற்கேற்ப அதிகரிக்கும்.
3) அது விற்கப்படும் வெளியீட்டின் அதிகரிப்பிற்கேற்ப வீழ்ச்சியடையும்.
4) அது முதலில் அதிகரிக்கும் பின்பு வீழ்ச்சியடையும்.
5) அது முதலில் வீழ்ச்சியடைந்து பின்பு அதிகரிக்கும்.

134) பொருளொன்றின் உற்பத்தியிலிருந்து நிறுவனம் சாதாரண இலாபத்தை உழைக்கும்போது அந்நிறுவனத்தின்,

1) உற்பத்தியிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாய் வெளிப்படையான செலவுகளுக்குச் சமனாகும்.
2) வெளிப்படையான செலவுகள் உள்ளாந்த செலவுகளுக்குச் சமனாகும்.
3) உற்பத்தியிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாய் உள்ளாந்த செலவுகளுக்குச் சமனாகும்.
4) உற்பத்தியிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாய் வெளியார்ந்த மற்றும் உள்ளாந்த செலவுகளின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.
5) உள்ளாந்த செலவுகள் வெளியார்ந்த செலவுகளைவிடக் கூடுதலாக இருக்கும்.

## August 2014

135) குறித்த பொருளொன்றின் கேள்விச் சமன்பாடு பின்வருமாறு தரப்பட்டுள்ளது?

$$Qd = 200 - 8P$$

இப்பொருளின் விலை ரூ.10 ஆகும்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சிக்குணகத்தின் பெறுமதி யாது?

1) - 6.0 ஆகும். 2) - 0.66 ஆகும். 3) -0.06 ஆகும். 4) + 0.06 ஆகும்.
5) + 0.66 ஆகும்.

136) விலைக்கேள்வி நெகிழ்ச்சியினால் அளவிடப்படுவது.

1) கேள்வியை தீர்மானிக்கும் காரணியொன்றில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப கேள்வித்தொகையில் ஏற்படும் துலங்கலாகும்.
2) பண்டமொன்றின் விலையில் ஏற்படும் சார்பளவு மாற்றத்திற்கேற் கேள்வித்தொகையில் ஏற்படும் துலங்கலாகும்.
3) குறித்த ஒரு பொருளின் கேள்வித்தொகை மற்றொரு பொருளின் விலை மாற்றத்திற்கேற்ப வெளிப்படுத்தும் துலங்கலாகும்.
4) உற்பத்திக் காரணியொன்றிள் விலையில் ஏற்படும் சார்பளவு மாற்றத்திற்கேற்ப பொருளின் கேள்வித்தொகையில் ஏற்படும் துலங்கலாகும்.
5) விலையில் ஏற்படும் சார்பளவு மாற்றத்திற்கேற்ப கேள்வித்தொகையில் ஏற்படும் அதிகரிப்பாகும்.

137) நிரம்பலாளரொருவர் தனது விற்பனைப் பொருளின் விலையை 10% இனால் அதிகரிப்பதன் மூலம் வருவாயை அதிகரித்தக்கொள்ள எதிர்பார்க்கிறார். இக்குறிக்கோளை அடைய வேண்டுமாயின் மிகப்பொருத்தமாக அமைவது.

1) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றை விடக் குறைவாக இருக்க வேண்டும் என்பதாகும்.
2) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றை விடக் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதாகும்.
3) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றுக்கு சமனாக இருக்க வேண்டும் என்பதாகும்.
4) விலைநிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியமாக இருக்க வேண்டும் என்பதாகும்.
5) விலைநிரம்பல் நெகிழ்ச்சியானது பூரண நெகிழ்ச்சியுள்ளதாக அமைய வேண்டும் என்பதாகும்.

138) உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் போன்ற விவசாய விளைபொருள்களின் சந்தை விலைகள் வருடத்தின் சில காலப்பகுதிகளில் உயர்ந்த மட்டத்திலும் வேறு சில காலங்களில் குறைந்த மட்டத்திலும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலமைக்குப் பிரதான காரணியாக அமைவது.

1) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
2) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
4) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.
5) பூரண நெகிழ்வுள்ள கேள்வியும், பூரண நெகிழ்வற்ற நிரம்பலும் நிலவுகின்றமையாகும்.

139) குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் பற்றிய தகவலகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| விலை (ரூபா) | கேள்வித்தொகை (அலகு) | நிரம்பல்தொகை(அலகு) |
|---|---|---|
| 80 | 400 | 800 |
| 100 | 200 | 1000 |

கேள்வி நிரம்பல் வளையிகள் நேர்கோடுகளெனக் கருதுக. இப்பொருளின் சமநிலை விலை மற்றும் தொகையினைச் சரியாகக் காட்டும் விடை எது?

| | சமநிலை விலை | சமநிலைத்தொகை |
|---|---|---|
| 1. | 50 | 500 |
| 2. | 60 | 400 |
| 3. | 60 | 600 |
| 4. | 65 | 300 |
| 5. | 70 | 500 |

140) பொருளொன்றின் நிரம்பல் வளையியானது Qs= 100 +10P எனத் தரப்பட்டுள்ளது. இப்பொருளின் மீது ரூ.5 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின் வரியின் பின்னரான நிரம்பல் சமன்பாடு

(1) Qs= 50 +10P ஆகும். (2) Qs= 100 +5P ஆகும். (3) Qs= 100 +15P ஆகும்.
(4) Qs= 100 +50P ஆகும். (5) Qs= 500 +50P ஆகும்.

141) நிறுவனமொன்றின் குறுங்கால உற்பத்தி வளையியில் எல்லை உற்பத்தி பூச்சியமாகும்போது

1) மொத்த உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
2) சராசரி உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
3) சராசரிச் செலவு மிகக் குறைந்த மட்டத்திலிருக்கும்.
4) எல்லைச் செலவு மிகக் குறைந்த மட்டத்திலிருக்கும்.
5) எல்லை உற்பத்தி சராசரி உற்பத்திக்குச் சமப்படும்.

142) "அளவுத்திட்ட விளைவு விதி" என்பதனால் கருதப்படுவது

1) உள்ளீடுகளின் விலை மாற்றமடையும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.
2) குறைந்த பட்சம் ஒரு உள்ளீடு நிலையாக உள்ள நிலையில் மாறும் உள்ளீடுகளை மாற்றியமைக்கும் போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.

3) தொழினுட்பம் மாற்றமடையும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.

4) உள்ளீடுகளின் தரம் மாற்றமடையும்போது நிறுவனமொன்றின் மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.

5) நிறுவனமொன்றின் எல்லா உள்ளீடுகளும் மாற்றமடையும்போது மொத்த வெளியீடு மாற்றமடையும் விதமாகும்.

143) குறுங்காலத்தில் நிறுவனமொன்றின் மொத்தச்செலவுவளையியின் வடிவம் தீர்மானிக்கப்படுவது.

1) சராசரி நிலையான செலவின் நடத்தையின் அடிப்படையிலாகும்.
2) தொழினுட்பம் மாறும் வீதத்தின் அடிப்படையிலாகும்.
3) சராசரி மொத்தச் செலவின் நடத்தையின் அடிப்படையிலாகும்.
4) மொத்த மாறும் செலவின் நடத்தையின் அடிப்படையிலாகும்.
5) அளவுத்திட்ட விளைவு விதியின் நடத்தையின் அடிப்படையிலாகும்.

144) நிறுவனமொன்றின் வெளியீடு அதிகரிக்கும்போது சராசரி நிலையான செலவானது தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்கின்ற போதிலும் அது பூச்சியமாகாதிருக்கக் காரணம்.

1) மொத்தச் செலவு மாறாதிருப்பதாகும்.
2) மாறும் செலவொன்று காணப்படுவதாகும்.
3) சராசரிச் செலவொன்று காணப்படுவதாகும்.
4) எல்லைச் செலவொன்று காணப்படுவதாகும்.
5) நிலையான செலவொன்று காணப்படுவதாகும்.

145) நிறுவனமொன்றின் குறுங்கால நிரம்பல் வளையியாக அமைவது

1) சராசரி மாறும் செலவுக்கு மேற்பட்ட எல்லைச் செலவு வளையியின் பகுதியாகும்.
2) சராசரி மாறும் செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகும்.
3) எல்லைச் செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகும்.
4) சராசரி மொத்தச் செலவு வளையியின் அதிகரித்துச் செல்லும் பகுதியாகும்.
5) சராசரி மொத்தச் செலவு வளையிக்கு மேற்பட்ட எல்லைச் செலவு வளையியின் பகுதியாகும்.

146) ஓரினத் தன்மை வாய்ந்த அல்லது வேறாக்கம் செய்யப்பட்ட பொருள்களை நிரம்பல் செய்யும் பெரிய நிறுவனங்கள் சில காணப்படும்போது அது ஒரு,

1) இருவர் உரிமைச் சந்தையாகும்.
2) தனியுரிமைப் போட்டிச் சந்தையாகும்.
3) நிறை போட்டிச் சந்தையாகும்.
4) சிலருரிமைச் சந்தையாகும்.
5) தனியுரிமைச் சந்தையாகும்.

147) நிறை போட்டி நிறுவனமொன்று எதிர்நோக்கும் கேள்வி வளையியானது பூரண நெகிழ்வுள்ளதாக அமைவது,

1. சந்தையில் ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்கள் விற்கப்படுவதனாலாகும்.
2. நிரம்பலாளன் விலையைத் தீர்மானிப்பவனாக இருப்பதனாலாகும்.
3. நிரம்பலாளன் விலையைத் ஏற்போனாக இருப்பதனாலாகும்.
4. நிரம்பலாளனுக்கு தேவையான தகவல்கள் கிடைக்காமையினாலாகும்.
5. விளம்பர நடவடிக்கைகள் இடம்பெறாமையினாலாகும்.

148) தனியுரிமை நிறுவனமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியது

1) பொருளின் விலை மட்டுமாகும்.
2) பொருளின் விலை அல்லது நிரம்பல் தொகை மட்டுமாகும்.
3) பொருளின் நிரம்பல் தொகை மட்டுமாகும்.
4) பொருளின் விலை மற்றும் நிரம்பல் தொகை ஆகிய இரண்டுமாகும்.
5) பொருளின் உற்பத்திச் செலவு மற்றும் நிரம்பல் தொகை ஆகிய இரண்டுமாகும்.

149) நிறுவனமொன்றின் சமநிலை நிர்ணயத்தின்போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனையாவது,

1) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும் கட்டத்தில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
2) எல்லைச் செலவு குறைந்து செல்லும் கட்டத்தின்போது எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
3) எல்லைச் செலவின் அதிதாழ்ந்த புள்ளியில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
4) சராசரிச் செலவு அதிகரித்துச் செல்லும் கட்டத்தில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.
5) சராசரிச் செலவு குறைந்து செல்லும் கட்டத்தில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படுவதாகும்.

## April 2015

நபரொருவரின் வருமானம் அதிகரிக்கும்போது பால்மாவுக்கான கேள்வியும் அதிகரிக்குமாயின், பால்மாவானது
(1) இழிவுப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (2) பொருளாதாரமல்லாப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.
(3) கிபன் பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (4) பொதுப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.
(5) சாதாரண பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.

(.........)

தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு போட்டிச் சந்தையில் 'சாதாரண பொருளொன்றின்' கேள்வி அதிகரிக்க நிரம்பல் வீழ்ச்சியடையுமாயின்,
(1) சமநிலை விலை வீழ்ச்சியடையும்; சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(2) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை ஆகிய இரண்டும் அதிகரிக்கும்.
(3) சமநிலைத் தொகை அதிகரிக்கும்; சமநிலை விலை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
(4) சமநிலை விலை வீழ்ச்சியடையும்; சமநிலைத் தொகை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
(5) சமநிலை விலை அதிகரிக்கும்; சமநிலைத் தொகை அதிகரிக்கலாம், வீழ்ச்சியடையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.

(...5.....)

சீனியும் கருப்பட்டியும் நுகர்வு நடவடிக்கைகள் பலவற்றில் ஒன்றுக்கொன்று பதிலீடாகக் கருதப்படும். எனவே, சீனியின் விலை அதிகரிக்கும்போது,
(1) கருப்பட்டிக்கான கேள்வி அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.
(2) கருப்பட்டிக்கான கேள்வி குறையும் என எதிர்பார்க்கலாம்.
(3) கருப்பட்டிக்கான கேள்வித் தொகை குறையும் என எதிர்பார்க்கலாம்.
(4) கருப்பட்டியின் விலை குறையும் என எதிர்பார்க்கலாம்.
(5) கருப்பட்டிக்கான கேள்வித் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

(...1.....)

தேங்காய்களுக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி −1.0 எனக் கருதுக. இந்நிலைமையில் தேங்காயொன்றின் விலை ரூபா 60 ஆகவுள்ளபோது கேள்வித் தொகையானது 500 தேங்காய்களாகும். கேள்வித் தொகை 600 தேங்காய்களாயின், தேங்காயொன்றின் விலை எவ்வளவாக இருக்கும் ?

(1) ரூபா 30 (2) ரூபா 40 (3) ரூபா 50 (4) ரூபா 55 (5) ரூபா 60 (.........)

பின்வருவனவற்றுள் பொருளொன்றின் கேள்வி வளையியின் இடப்புற நகர்வுக்குக் காரணமாவது எது ?

(1) அப்பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(2) அப்பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
(3) இணைப்புப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
(4) பதிலீட்டுப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(5) எதிர்காலத்தில் விலை வீழ்ச்சியடையலாம் என்னும் எதிர்பார்க்கை. (...5...)

பொருளொன்றின் சந்தைக் கேள்வி வளையி கீழ்நோக்கிய சரிவுள்ளதாயும் சந்தை நிரம்பல் வளையி மேல்நோக்கிய சரிவுள்ளதாயும் காணப்படும்போது உள்ளீடுகளின் விலைகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது,

(1) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையினை அதிகரிக்கச் செய்யும்.
(2) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையினை வீழ்ச்சியடையச் செய்யும்.
(3) நிரம்பல் வளையியை இடப்புறம் நகரச் செய்யும்.
(4) சமநிலை விலையை வீழ்ச்சியடையச் செய்வதுடன் சமநிலைத் தொகையை அதிகரிக்கச் செய்யும்.
(5) சமநிலை விலையை அதிகரிக்கச் செய்வதுடன் சமநிலைத் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும். (.........)

சிறிய நாடொன்றில் சீனிக்கான உள்நாட்டுச் சந்தைக் கேள்வி மற்றும் சந்தை நிரம்பல் வளையிகள் பின்வரு சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

$Q_d = 320 - 3P$ (கேள்வி)

$Q_s = -80 + 2P$ (நிரம்பல்)


அத்துடன் அந்நாட்டின் சீனிக்கான சந்தை சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்படுவதாகவும் சீனியின் உலக விலை அலகொன்று ரூபா 60 எனவும் கருதுக. நாடு சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்பட்டபின் சந்தைக்கு உள்நாட்டிலிருந்து நிரம்பல் செய்யப்படும் சீனியின் அளவு யாது ?

(1) 40 அலகுகள் (2) 60 அலகுகள் (3) 80 அலகுகள்
(4) 100 அலகுகள் (5) 140 அலகுகள் (.........)

பெற்றோலுக்கான கேள்வி மிகவும் நெகிழ்வற்றதாகவும் நிரம்பல் மிகவும் நெகிழ்வுள்ளதாகவும் இருப்பதாகக் கருதுக. இந்நிலைமையில் பெற்றோல் மீது விதிக்கப்படும் ஓர் உற்பத்தி வரியானது,

(1) கொள்வனவாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(2) விற்பனையாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(3) கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர் மீது சமமான சுமையினை ஏற்படுத்தும்.
(4) வரிசெலுத்துவோர் மீது முழுமையான சுமையினை ஏற்படுத்தும்.
(5) கொள்வனவாளர் மீதோ விற்பனையாளர் மீதோ சுமையினை ஏற்படுத்தாது. (.........)

பின்வரும் வரைபு விவசாயப் பொருளொன்றுக்கான போட்டிச் சந்தையில் கேள்வி, நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது



அரசாங்கம் இப்பொருளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் உற்பத்தியாளருக்கு, உற்பத்தி அலகொன்றுக்கு ரூபா 2 மானியம் வழங்கத் தீர்மானிக்கிறது. மானியத்தின் பின்னரான நுகர்வோன் மிகை,

(1) ரூ. 20 ஆகும். (2) ரூ. 80 ஆகும். (3) ரூ. 90 ஆகும்.
(4) ரூ. 160 ஆகும். (5) ரூ. 180 ஆகும். (.........)

சந்தைச் சமநிலை விலையை விடக் குறைந்த ஓர் உச்ச விலையை நிர்ணயித்து விதிக்கப்படும் உச்ச விலைக் கொள்கையின் விளைவானது, சந்தையில்

(1) மிகை நிரம்பலை ஏற்படுத்தும். (2) மிகைக் கேள்வியை ஏற்படுத்தும்.
(3) சமநிலை விலையை ஏற்படுத்தும். (4) நிரம்பலில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
(5) கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். (.........)


உற்பத்திச் செயன்முறையில் ஒரு குறுங்காலம் என்பது,

(1) நிறுவனம் மேலதிகமாக வேலையாட்களை பணிக்கமர்த்த முடியாத காலப்பகுதியாகும்.
(2) உற்பத்தி செய்யப்படும் வெளியீட்டின் அளவு நிலையாகவுள்ள காலப்பகுதியாகும்.
(3) பெரும்பாலான உள்ளீடுகளுக்கு பற்றாக்குறை நிலவும் காலப்பகுதியாகும்.
(4) எல்லா உள்ளீடுகளும் நிலையாக இருந்தாலும் வெளியீட்டை மாற்றியமைக்கக்கூடிய காலப்பகுதியாகும்.
(5) சில உள்ளீடுகளின் அளவுகள் நிலையாகவுள்ளபோது ஏனைய உள்ளீடுகளின் அளவுகளை மாற்றியமைக்கக் கூடிய காலப்பகுதியாகும். (.........)

மொத்தச் செலவு (TC) மற்றும் மொத்த மாறும் செலவு (TVC) வளையிகளுக்கு இடையிலான நிலைக்குத்து இடைவெளியானது

(1) வெளியீடு வீழ்ச்சியடையும்போது குறைவடையும்.
(2) வெளியீடு வீழ்ச்சியடையும்போது அதிகரிக்கும்.
(3) எல்லைச் செலவுக்குச் (MC) சமனாகும்.
(4) மொத்த நிலையான செலவுக்குச் (TFC) சமனாகும்.
(5) சராசரி நிலையான செலவுக்குச் (AFC) சமனாகும். (.........)

வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு செலவு மற்றும் கேள்வி வளையிகளை எதிர்நோக்கும் போட்டி உற்பத்தி நிறுவனமொன்று தனது வெளியீட்டை $Q_1$ இலிருந்து $Q_2$ ஆக அதிகரிக்குமாயின்,




(1) சாதாரண இலாபத்தை உழைக்கும்.
(2) இலாபத்தில் ஓர் அதிகரிப்பினை அனுபவிக்கும்.
(3) இலாபத்தில் ஒரு வீழ்ச்சியினை அனுபவிக்கும்.
(4) வருவாய்கள் அதிகரித்தாலும் செலவுகள் அதிகரிக்காது.
(5) செலவுகள் அதிகரித்தாலும் வருவாய்கள் அதிகரிக்காது.

(.........)

பின்வருவனவற்றில் தனியுரிமை போட்டிச் சந்தைகளின் **பண்பல்லாதது** எது ?

(1) ஒப்பீட்டளவில் இலகுவாக சந்தையில் உட்பிரவேசிக்கும் தன்மை
(2) வேறாக்கம் செய்யப்பட்ட பொருட்கள் காணப்படல்
(3) பொருளுக்கு குறிப்பிடத்தக்க அளவு விளம்பரம் காணப்படல்
(4) கொள்வனவாளரும் விற்பனையாளரும் அதிக எண்ணிக்கையில் காணப்படல்
(5) நிறுவனங்கள் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையிகளை எதிர்கொள்ளல் (.........)